# தென்மொழி


## தமிழ்நாடு தமிழர்க்கே!

தமிழர்க்குத் திராவிடம் என்பதோ அயன்மை!
    தமிழருக்(கு) இந்தியம் என்றுமே எதிர்மை!
தமிழர்க்குத் தமிழமே பொருந்திடும் இயன்மை!
    'தமிழ்த்தே சியமே' என்றும்பே ருண்மை!

'திரவிட உணர்வு' ஒரு மாயை என் பதற்கும்,
    'தேசிய இந்தியம்' பொய் என் பதற்கும்,
கரவட மாகவே காவிரி நீரைக்
    கருநா டகம்தர மறுப்பதே சான்றும்!

கண்ணகிக் கோயிலில் வழிப்படத் தமிழர்கள்
    கால்வைத் திடவும் இசையாமல், கேரளம்
திண்ண மாகவே மறுப்பதும் இந்தியத்
    தேசியம் என்பதைப் பொய்யென்று காட்டும்!

ஒற்றுமை ஒருமை என்பன வெல்லாம்
    உருப்படாக் கருத்துகள் என்பதைப்—பார்ப்பனன்
வெற்றுடல் பூணூலும் விளக்க வில்லையா,
    வேறு வேறு இனம்நாம் என்பதை?

ஆகையால் இந்தியத் தேசியம் என்பதோ
    'அடிமுட்'டாள்தனம், அடிமை'—என் றுணர்க!
சாகையில் எழுந்தோ உரிமை மீட்பது?
    சாகாத் தமிழர்கள் விடுதலைக் கெழுகவே!

'பிராமணன்' என்ஒரு பெயருள்ள வரைக்கும்—
    பீடிலா இந்தியே' ஆள்கின்ற வரைக்கும்—
இராதிங்கு ஒற்றுமை, ஒருமைப் பாடெல்லாம்!
    எனவே முழக்குக 'தமிழ்நாடு தமிழர்க்கே'!


ஆசிரியர்
பெருஞ்சித்திரனர்



சுவடி : 26
ஓலை : 2

விலை:
உருபா : 2-00



Scanned with CamScanner

# நமக்கு வந்த மடல்கள்.

ஓ! 1455: மதிப்பிற்குரிய தென்மொழி ஆசிரியர் அவர்களுக்குத் தங்களுக்கு அன்பு மிக்க தமிழ்த்தாய் வணக்கம் அளிப்பதில் மிகுந்த பெருமையடைகிறேன். தங்களின் வெளியீடான தென்மொழி இதழைப் பார்க்கும் போது என் உள்ளம் மகிழ்ச்சி கொள்கிறது. தமிழ் இன உணர்வு உள்ள நூல்களில் உங்களது வெளியீடும் இடம் பெற்றுள்ளதைக் கண்டு மனம் மகிழ்ச்சி பெறுகிறது. தமிழனின் தன்மான உணர்வுக்கு எடுத்துக் காட்டாக விடுதலை வேண்டிப் போராடும் நம் போராளிகளுக்கு விரைவில் 'தமிழ் ஈழம்' கிடைக்க அந்த இறைவனை வணங்குகிறேன். தமிழ் ஈழ விடுதலை பெற, யார் தடை செய்தாலும் அவர்கள் தமிழர்களின் எதிரிகள் ஆவார்கள்.

—இரா. மீனாட்சி சுந்தரம், சங்கரன் கோயில்.

ஓ: 1456: அன்பின் தாயகமே! அறிவின் வளர்ப்பிடமே! வீரத்தின் விளைநிலமே! வணக்கம். 'தமிழ் நிலம்' இதழ் எண் 146, மற்றும் "தென்மொழி" சுவடி 26 ஓலை1 கண்டேன்.

'சட்டிக்குத் தப்பி நெருப்பில் விழுந்த தமிழகமே'—பாடலுக்கு நன்றி! 'மானங் கெட்டதுகளும்; மதிகெட்டதுகளும்' என்ற பாடலுக்கும் நன்றி. 'அடிமை மீட்குவோம்' பாடல், நாற்பதாண்டுகளின் நற்றிரண்டுள்ளத்தின் நொந்த மென்மையான இசை, இரக்கம் கொள்கிறேன்.

"இராசீவின் இறுதி;இட்ட சாவம் முட்டியது" ஆசிரியவுரை, ஆசிரியவுரையா அது? இல்லை இல்லை, உலக உருண்டையில் மருண்ட தமிழர்கள்-மானங்கெட்டத் தமிழர்கள்,பலகோடித் தமிழர்கள் வயிற்றுப்பிழைப்பிற்கென்று வாழ்க்கை நடத்துகையில், புற நானூற்று மறவன் ஒருவனின் மானம் கமழும் புயலின் வீச்சு! கடலின் கொந்தளிப்பு; எரிமலையின் வெடிப்பு! வள்ளுவன் கண்ட கவரி மாந்தன் ஒருவனின் வரலாறு—கதை—மறக்க முடியாத—மாற்ற முடியாத— மறத்தமிழனின்—எழுச்சியுரை! நெருப்புரை! கொடியோன் ஒருவனின் சாவால் ஊளையிட்ட ஓநாய்களின் குரல் ஒடுங்க, குலை நடுங்க, அதிர்ந்த நிலவெடிப்பு!

ஆரியரின் நஞ்சு உள்ளத்தை பஞ்சினும் வெண்மையான நெஞ்சத்தூய்மையுடன் அஞ்சா நெஞ்சத்துடன் முழக்கிய போர் முழக்கம்!

தொடை நடுங்கிக் கருணாநிதியின் உள்ளுணர்வைத் தோலுரித்துக் காட்டியமை எண்ணி மானத்தமிழர்கள் மனம் புழுங்கட்டும்!—மக்கள் வரிப்பணத்தில்—பல கோடிப் பணத்தில்—பாதுகாப்பில் மிளிர்ந்த—ஒளிர்ந்த ஒரு கண்ணாடி மாளிகையைத் தூள் தூளாக்கிய—அந்த "உரை"க் குண்டு உலகில் எந்த மாந்தனும் எண்ணிப் பாராதது; எழுதத் துணியாதது!

"கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்" —அன்று வள்ளுவன் கண்ட புலிநிகர் மாந்தனை இன்று காண்கிறேன். களிப் புறுகிறேன். நேதாசிகளையும், நெப்போலியன்களையும் நான் காணவில்லை. ஆனால் உங்களைக் காண்கிறேன்; களிப்பில் துள்ளுகிறேன்.

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே

[ திருவனம் தி. பி. 1990 (1959) ]



# தென்மொழி

மொழி—இனம்—நாடு.

**நம் முழக்க, நோக்கம், கொள்கை,-முயற்சி!**

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமுழக்க, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார். தொலைபேசி: (847829)

சுவடி: 26] தி.பி. உ0உஉ — மடங்கல் (செப்டம்பர் 91) [ஓலை:2

# இராசீவின் இறுதி இட்டசாவம் முட்டியது-2

இந்திய அரசியலைப் பொறுத்த வரையில், ஆட்சி அதிகார நிலையில் ஏற்பட்டிருக்கும்! கையூட்டு, கொள்ளையடிப்பு, அதிகாரத்தைத் தவறாகப் பயன் படுத்துதல், ஆட்சித் தலைமை, அதிகாரத் தலைமை ஆகியவை மக்களை விட்டு விலகி இயங்குவது, செருக்கும் தன் மூப்பும் கொண்ட வல்லதிகாரப் போக்கு, அறிஞர்களை மதியாத நிலைமை, அரசுப் பணங்களில் ஆட்சியதிகாரத்தில் உள்ளவர்கள் துணிந்து கை வைப்பது, அவற்றைக் கையாடுவது, ஆடம்பர ஆரவாரத்தனமாக அதிகாரத்தில் உள்ளவர்கள் வாழ்வது, தங்கள் சொந்தப் பாதுகாப்புக்கென அரசுப் பணத்தைப் பெரும் அளவில் செலவழிப்பது, மக்கள் வரிப் பணத்தைத் தங்கள் சொந்தப் பணமாகக் கருதி ஊர் உலா, உலக உலா வருவது, தங்கள் சொந்த சாய்காலையும் பெருமையையும் புகழையும், உலக நாடுகளிடம் ஒரு போலி மதிப்பையும் தேடிக் கொள்ள, ஏழ்மை நாடாக உள்ள இந்தியாவில் உலக விழாக்களையும், உலக விளையாட்டுகளையும் பல கோடி உருபாக்களை வாரியிரைத்துக் கொண்டாடுவது, கலை, பண

பாட்டுப் பரிமாற்ற விழாக்கள், வேடிக்கைகள் என்று வேற்று நாடுகளில் போய் விழாக்கள், வெட்டி நிகழ்ச்சிகளை நடத்துவது, தேர்தலில் 100 கோடி முதல் 500 கோடி வரை, தரகு முதலாளி-களும், இங்குள்ள கொள்ளை முதலாளிகளும் ஆட்சியினரைக் கை-களில் போட்டுக் கொள்ளக் கொடுத்த கறுப்புப் பணங்களைச் செல விடுவது, தேர்தலில் திருட்டு தில்லு முல்லு அரம்பத் தனங்களைக் கடைப்பிடிப்பது, கள்ள ஒப்போலைகளைப் போடச் செய்வது.

தங்களுக்குப் பிடிக்காத—தங்களுடன் ஒத்துப் போகாத—இனத்தை, பிற கட்சித் தலைவர்களைத் தீர்த்துக் கட்டுவது, கீழ் இறக்குவது, அரசியல் களத்தை விட்டு அப்புறப் படுத்துவது, தங்களின் அரசியல் செயல்பாடுகளை தங்களைப்—பல வகையான விளம்பர உத்திகளைக் கையாண்டும், கோடி கோடியாக அரசுப் பணத்தைச் செலவழித்தும்—பொய்யாகவும், புனைவாகவும் பெரும் அளவில் விளம்பரப் படுத்திக் கொள்வது, அந்த வகையில் அரசின் தலையாய விளம்பரக் கருவிகளான வானொலி, தொலைக் காட்சி பிறவற்றைத் தங்களின் தனி நலத்துக்காகத் தாங்களே பயன்படுத்திக் கொள்வது, அதே போல் பிற அரசியல் தலைவர்கள் அவற்றால் விளம்பரம் பெறுவதைத் தடுப்பது, தங்களுக் கென்று குண்டு தொளைக்காத சட்டை, குண்டு தொளைக்காத இயங்கிகள், குண்டு தொளைக்காத மேடைகள் முதலிய பாசிச, முதலாளிய நாட்டுப் பாதுகாப்பு முறைகளைக் கையாள்வது, தங் களின் பாதுகாப்புக் கெனப் பல படிநிலைகளையும் வளையங்களையும் சாண்ட காவல் கட்டுப் பாடுகளையுப், ஒற்றுக் காவலர்களையும் பல கோடி உருபாக்கள் செலவில் அமைத்துக் கொள்வது, நெருக் கடி நிலைகளை அறிவிப்பது, அவ்வாறு அறிவிக்காமலேயே அடக்கு முறைகளைக் கறுப்புச் சட்டங்களை, கொடிய வன்முறையான நடைமுறைகளைப் போடுவது—கையாள்வது, சட்ட மன்ற பாராளு மன்ற எதிர்க் கட்சி உறுப்பினர்களையும் மாநில, அனைத் திந்திய எதிர்க்கட்சித் தலைவர்களையும் பெரு விலை கொடுத்து வாங்குவது, தங்களுக்கு மாறான—அடங்கிப் போகாத—மாநில அரசுகளைக் கவிழ்ப்பது, ஆளுநர்களை மாற்றுவது, திரும்பப் பெறு-வது, ஒரு புரட்சி அமைப்பைக் கொண்டே இன்னொரு புரட்சி அமைப்பை அழிப்பது—இன்னோரன்ன அரசியலுக்கும் அறிவிய லுக்கும் பொருந்தாத தில்லு முல்லு, ஏமாற்றுத் தகிடுதத்தப் பித்தலாட்டப் புனை சுருட்டு முறைகள் எல்லாம், இந்திரா தலைமையமைச்சராகப் பதவியேற்ற காலத்திலிருந்துதான் தொடங்கின என்பதைச் சிறிது அரசியலறிவு கொண்டவர்களும் விளங்கிக் கொள்ளாமற் போக முடியாது; மேனிலை அரசியல் அறிவு உள்ளவர்களும் மறுக்க முடியாது. அரசியலுக்கே மாறு பட்ட, சூதாட்டத்தனமான, சூழ்ச்சி நிறைந்த, கரவான இந்திரா-வின் இத் தவறான கொடுமையான நடைமுறைகளுக் கெல்லாம் ஏராளமான சான்றுகள் உள்ளன. அவற்றை யெல்லாம் இங் கெடுத்துக் கூறுவதானால், இவ் வேடு இடங் கொள்ளாது; எடுத்துக் காட்டாக அவர் காலத்தின் தாறுமாறான நடவடிக்கைகளில் ஒன்றிரண்டை மட்டும் காட்டுவோம்;

1984-இல் இந்திராவின் தேர்தல் விளம்பரத்திற்காக மட்டும், அவரின் தொகுதி ஒன்றிற்கு 10 முதல் 20 இலக்கம் உருபா வரை செலவழிக்கப் பட்டடது. அவ்வகையில் மொத்தம் ஏறத்தாழ 100 கோடி உருபாவைச் செலவிட்டார். இத் தொகை இந்திய முதலாளிகளிடமிருந்து பெற்ற கருப்புப் பணம். இதற்குக் கைம் மாறாக, அவர் ஆட்சிக்கு வந்ததும் பெரும் முதலாளிகள் கொள்ளை ஊதியம் பெற அரசியல் தடுப்புக் கதவுகளை அவர்களுக்குத் தாராளமாகத் திறந்து விட்டார், இந்திரா.

இந்திரா, 1966 முதல் 77 வரையில் 11 ஆண்டுகளும், மீண்டும் 80 முதல் 84 வரை 5 ஆண்டுகளும், ஆக ஏறத்தாழ 16 ஆண்டு-களும் அதிகாரத்தில் இருந்தார். 1975-சூன் 26 முதல் 1977 பிப்ரவரி முடிய நெருக்கடி நிலையை இந்திரா அறிவித்திருந்தார். இக் கால கட்டத்தில் அவர் ஓர் அனைத்ததிகாரியை (சர்வாதி காரியை)ப் போலவே நடந்து கொண்டார். அக்கால் நடந்த அரசியல் அட்டூழியங்களைப்போல இந்திய அரசியலில் வேறெந்தக் காலத்திலும், வேறெவரும் மக்களுக்குச் செய்யவில்லை. ஏறத்தாழ 50 ஆயிரம் பேர் நாடு முழுவதிலும் சிறை வைக்கப் பெற்றனர். தேசாய், செயப்பிரகாசு நாராயண் போன்ற பெரும் பெரும் தலைவர்கள் எல்லாரும் சிறைக்குள்ளே தள்ளப் பெற்றனர். ஏறத் தாழ நாடு முழுமையும் உள்ள எல்லாத் தீவிர எதிர்க்கட்சித் தலைவர்களும் தொண்டர்களும் சிறைக்குள் ஓராண்டுக் காலம் வாடி வதங்கினர். பேச்சுரிமை, எழுத்துரிமை, செய்தித்தாள் உரிமைகள் முதலிய மக்கள் நல உரிமைகள் அனைத்தும் பறிக்கப் பட்டு விட்டன. மக்களில் எவரும் எது பற்றியும் 'ஏன்' 'எதற்கு' என்று கேட்கவும் அஞ்சினர். ஒவ்வொரு நாளும் மக்கள் 'வெருக்' 'வெருக்' என்று அஞ்சி நடுங்கிச் சாகாமல் செத்துக் கொண்டிருந் தனர்.

அந் நெருக்கடி நிலைக் காலத்திலும், அவர் தலைமை அமைச்ச ராகப் பொறுப்பிலிருந்த பிற கால கட்டத்திலும் இந்தியாவின் அரசியல், பொருளியல், குமுகவியல், அறவியல் (நீதியியல்), ஆட்சியியல், பாராளுமன்ற, சட்டமன்ற நடவடிக்கைகள் முதலிய அனைத்தும் சீர் குலைந்தன. தாறுமாறாகச் சிதறுண்டன; முன்னேற் றம் தடைப் பட்டது. அரசியலில் குற்றவாளிகளும், கொடுமைக் காரர்களும் கொள்ளையரும், திருடர்களும், உட்புகுந்தனர்; ஆட்சியாளர்களோடு கைகோத்துக் கொண்டனர்.

—கோடி கோடியாய்க் கொள்ளை அடிப்பவர்கள் பாராளு மன்ற உறுப்பினர்கள் நடுவண் அமைச்சர்கள் ஆனார்கள்; அல்லது ஆனபின் கொள்ளையர்களாக மாறினார்கள்.

—இலக்கம் இலக்கமாய்க் கொள்ளை அடிப்பவர்கள், அல்லது அடிக்க விரும்பியவர்கள் சட்ட மன்றங்களைக் கைப்பற்றினார்கள், உறுப்பினர்களாக, மாநில அமைச்சர்களாகப் பதவியேற்றார்கள்;

ஆயிரம் ஆயிரமாகக் கொள்ளை அடிப்பவர்கள், அல்லது அவ் வாறு விரும்பியவர் நகராட்சி உறுப்பினர்கள், அல்லது ஒன்றியச் செயலாளர்களாகப் பதவியேற்றார்கள்;

Scanned with CamScanner

மொத்தத்தில் அரசியலை ஒரு வருவாய்க்குரிய கருவியாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். இந்த நிலையெல்லாம் இந்திரா தொடங்கி வைத்து, இராசீவ் விரிவாக்கம் செய்த முறைகளாக ஆகி விட்டன.

உலக வங்கிக் கணக்குப்படி பொருளியலில் இந்திரா ஆட்சிக்கு வந்த 1966-இல், இந்தியா உலகப் பொருளியல் வளர்ச்சியில் 85-ஆவது இடத்தில் இருந்தது. 1977-இல், அவர் 11 ஆண்டுகள் இந்திய அரசியலில் தலைமையேற்ற பின், அஃதாவது அவர் முதல் முறை அவர் பதவியை விட்டு வெளியேற்றப் படுகையில், அது 111-ஆவது இடத்திற்கு வந்து, அதன் பின் அது கடைசி இடத்திற்கு வந்தது.

இந்திரா ஆட்சியில் ஆசிய விளையாட்டு 1982 நவம்பரில் நடந்தது. அதில் பல கோடி உருபாக்கள் அரசின் பல்வேறு தரப்பினரால் கொள்ளை யடிக்கப் பட்டன. தொடக்கத்தில் அதற்கு 70 கோடி செலவாகும்—செலவு ஆகலாம் என்று மதிப்பிடப் பெற்றது. பிறகு 150 கோடி ஒதுக்கப்பட்டது. இறுதியில் அதற்கு மக்கள் வரிப்பணத்தில் 1700 கோடி செலவானதாக கணக்குக் காட்டினர். இந்த வகையில் நடந்த தில்லு முல்லுகளும், ஊழல்களும் ஏராளம். இது பற்றியே ஒரு தனிக் கட்டுரை எழுதப்பட வேண்டும். இது பற்றியெல்லாம் இந்த நாட்டின் ஏழை மக்களுக்கும் நடுத்தர மக்களுக்கும் எதுவும் தெரிய வாய்ப்பில்லை. அதை அவர்கள் தெரிந்து கொள்வதையும் அரசு விரும்புவதில்லை. எப்பொழுதும் இது போன்ற ஊழல்கள் அரசினரால் கரவாக, வலக்காரமாகத் திட்ட மிட்டு மறைக்கப் படுகின்றன. இவ்வனைத்துச் செயல்களுக்கும் இந்திராதான் வித்திட்டவர். இந்திய அரசியலையே அவர் நாற்ற அடித்து விட்டார். அதன் தீ நாற்றத்தைப் பல நூறு மடங்குகளாகப் பெருக்கி விட்டவர் அவரின் அரசியல் பிறங்கடை (வாரிசு) ஆன இராசீவே! எனவே இராசீவை நினைக்கும் பொழுதெல்லாம் அவரின் அளவு மீறிய, தாறுமாறான வளர்ச்சிக்கு அடிப்படையான அவருடைய தாயை —இந்திராவை நாம் நினைத்துத்தான் ஆக வேண்டும்.

இனி, இராசீவின் மறைவு குறித்த செய்திக்கு நாம் வருவோம். அவரின் மறைவு காலத்தால் தேவையானது. இனி மேலும் அம் முள் மரம் இந்தியாவில் வளர்ச்சி பெற்றால் பார்த்தீனியம் என்னும் நச்சு மரம் பரவியது போல நாடெல்லாம் பரவியிருக்கும். நல்ல வேளை அவர் மறைவுற்றது நாட்டுக்கு நல்லதாக —குறிப்பாக நம் தமிழினத்திற்கு மிகவும் நல்லதாகப்-போயிற்று. பெரும்பாலும் தீமைகள், கொடுமைகள் தாமாக அழிவதில்லை. நல்லவை நல்ல சூழல் இருந்தால்தான் நிலைத்து நிற்கும். ஆனால் தீமைகள் அவ்வாறில்லை. நல்ல சூழல் இல்லையானாலும் அவை வளர்ந்து செழிக்கும். நெல்லுக்கு நல்ல வயலும், நல்ல எருவும், நீரும், பாதுகாப்பும், பராமரிப்பும் தேவை. ஆனால் புல்லுக்கு அவை தேவையில்லை. எந்தச் சூழலிலும் அவை வளரும்; நிலைத்து நிற்கும். அது போல்தான் மாந்தரிலும் தீயவர்கள், கொடுமை-

யானவர்கள், முட் செடிகள், புதர்கள், புற்கள் போல் மளமள வென்று வளர்ச்சி பெறுவார்கள். மற்றவர்களை வளர விடாமல் தாமே வளர்ந்து நிற்பார்கள்.

இராசீவும் அவருடைய அன்னையும் முள் மரமும், முட்புதரும், புற்களையும் போன்றவர்களே! அவர்கள் தாமாகவே, காலம் வந்து மடிவதில்லை. அழிக்கப்பட வேண்டிய தீமைகள் போல், இவர்களும் அழிக்கப்பட்டுத்தான் மடிகிறார்கள், இஃது இயற்கை-யும் வரலாறும் ஆகும்.

இந்திராவாலும், இராசீவாலும் தமிழினம் அழிந்தது போல் வேறு எந்த அரசியல் தலைவராலும் அழிபடவில்லை. அதுவும் இவர்கள் திட்டமிட்டே தமிழினத்தை அழித்தொழிக்க முற்பட்டார்கள்; அதன் வளர்ச்சியைத் தடுத்தார்கள். தமிழகத்திலும் சரி, தமிழீழத்திலும் சரி, இவர்களால் தமிழினம் அழிக்கப்பட்டே வந்தது. பார்ப்பனர்களே இவர்களால் பெரிதும் வளர்ச்சி பெற்றார்கள். பார்ப்பனியம் இவர்களால் மிகவும் தழைத் தோங்கி வலுப்பெற்று வந்தது. இதில் யாரும் கருத்து வேறுபாடு கொள்ளவோ, காட்டவோ முடியாது. பொத்தாம் பொதுவில், இவர்கள் நாட்டுக்கு நல்லது செய்தார்கள் என்று, இவர்களால் பெரிதும் நன்மைகள் பெற்ற பார்ப்பனர்களும், முதலாளிகளும், நம் இனத்து இரண்டகர்களும், வஞ்சகர்களும், காட்டிக் கொடுப்பான்களும் கூறுவார்களே யொழிய, வேறு தனித் தேசிய இனத்தவர்கள் எவரும் கூற முன்வர மாட்டார்கள். மொத்தத்தில், இவ்விரு தலைவர்களாலும், தமிழினத்தவர்கள், பஞ்சாபி இனத்தவர்கள், அசாமியர், காசுமீரிகள், நகாலாந்தியர், மிசோராமியர், வங்காளியர் போன்ற தேசிய இனத்தவர்கள் பெரிதும் வலுக்குன்றினர். நேரு காலத்தில் பார்ப்பனீய வளர்ச்சிக்கும், பிற தேசிய இனங்களின் தளர்ச்சிக்கும் வித்திடப் பெற்றது. அவரின் மகளான இந்திராவின் காலத்தில் அவற்றிற்கு எருவும் நீரும் இடப்பெற்றன. இராசீவ் காலத்திலோ அவை செடியாகி மரமாக வளர்க்கப் பெற்றன. இராசீவ் தொடர்ந்து அதிகாரத்தில் இருக்க விடப் பெற்றிருந்தால், அந் நச்சு மரங்கள் காய்த்தும் பழுத்தும் அவர் இனத்திற்குப் பயனும், பிற இனங்களுக்கு அழிவும் நேர்ந்திருக்கும் என்பதில் ஐயமே இல்லை.

இராசீவைப் பற்றி உயர்வாக எண்ணி இறுமாந்து கொண்டுள்ளவர்கள், நம் 'தமிழ் நிலம்' இதழின் 147-ஆம் எண்ணுள்ள அண்மை வெளியீட்டில் உள்ள 'இராசீவ் என்னும் கைதேர்ந்த அரசியல் நடிகனின் உள்ளும் புறமும்' என்னும் கட்டுரையை ஊன்றிப் படித்து உண்மையை உணர வேண்டுகிறோம்.

இவர், தமிழீழ விடுதலைப் போரில் குறுக்கீடாக நடந்து கொண்ட அடாவடித்தனங்களும், தமிழின அழிப்பு முயற்சிகளும் தமிழின மக்கள் இவ் வுலகில் உள்ள வரை நினைவில் இறுத்தி வைத்துக் கொள்ள வேண்டிய நிகழ்ச்சிகளாகும். 1987-ஆம் ஆண்டு இறுதியில் அவர் சிங்கள அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தமும், அவர்களுக்குத் துணையாகவும், விடுதலைப் புலிகளுக்கு

எதிராகவும், இந்திய அமைதி காக்கும் படை (Indian Peace Keeping Force) என்னும் பெயரில் இவர் முதன் முதல் யாழ்ப்பாணத்தில் இறக்கிய 28,000 இந்தியப் படை வீரர்களும், அவர்களுக்குப் பின்னர் படிப் படியாக அனுப்பிய ஏறத்தாழ ஒன்றரை இலக்கம் படை வீரர்களும், ஈழத்தில் தமிழினத்திற்குச் செய்த பேரழிவுகளையும் இழிவுகளையும் இவ்வுலகம் அழியும் வரை தமிழினம் மறந்து விட இயலாது. இலங்கையிலிருந்த ஏறத்தாழ 2 இலக்கம் இந்தியப் படைகளுக்காக ஆண்டுக்கு 15 ஆயிரம் கோடி உருபாவை இராசீவ் செலவழித்தார்.

இந்தியப் படையினர் இலங்கை செல்லாதிருந்த முன்னர், சிங்களப் படையினர் அங்கிருந்த தமிழர்களின் மேல் ஒரு நாளைக்கு 40, 50 முறைகளதாம் குண்டு வீச்சு நடத்தி வந்தனர். ஆனல் அங்கு இராசீவால் அனுப்பி வைக்கப் பெற்ற இந்தியப் படையினர் ஒரு நாளைக்கு 500 முறைகளுக்கு மேல் குண்டு வீச்சுகளை நடத்தியுள்ளனர். இவற்றிலிருந்து இராசீவ் ஈழத் தமிழினத்தை அழிக்க எந்த அளவு தீவிரம் காட்டியிருக்கிருர் என்பதை இக்கால் சிந்தித்துப் பார்த்தால் அவரின் கொடுமை புலப்படும். இவரால் இக் கால கட்டத்தில் ஆயிரக் கணக்கான தமிழ் இளைஞர்களும், இரண்டு இலக்கத்திற்கும் மேற்பட்ட தமிழினப் பொது மக்களும் கொல்லப்பட்டிருக்கின்றனர்; பன்னூற்றுக் கணக்கான பெண்கள் சீரழித்துச் சிதைக்கப் பட்டுள்ளனர்; 5000 பேர்களுக்கு மேல் கைகால்களை இழந்து போயிருக்கின்றனர். ஓரிலக்கத்திற்கும் மேலான தமிழ் மக்களின் வீடுகள் தரைமட்டமாக்கப் பட்டன; மூவாயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் சிறைப் படுத்தப்பட்டு உறுப்புச் சிதைவுகளுக்கு ஆளாக்கப் பட்டுள்ளனர்—என்றல் இவை தமிழினத்தை அழித்த செய்தியாகாதா என்று இன்றைக்கு இராசீவைக் கொண்டாடும் அரசியல் சூதர்கள் எண்ணிப் பார்க்கட்டும்.

இராசீவ், அன்றைய நிலையில் தமிழீழத்தைப் பொறுத்த அளவில், இலங்கையின் வல்லதிகாரத் தலைவரைப் போலவே நடந்து கொண்டார். அவர், தம் அமைதிப் படையென்னும் அரக்கர் படை அல்லது சாத்தானின் படையின் வழி, அங்குள்ள தமிழினத்தைப் படிப் படியாக அழிக்கத் தொடங்கிய அந்தக் கொடுமையை நாம் தென்மொழி, தமிழ் நிலம் ஆகிய இதழ்களின் வழியாக மிக வன்மையாகவும் கடுமையாகவும் கண்டித்து வந்தாலும், அவற்றின் தாக்கங்களை நம்மால் பொறுத்துக் கொள்ள முடியாமல், மனம் மிகவும் துயருற்றது.

அத்தகைய வெகுண்ட சூழலில் தென்மொழியின், 88-மார்ச்சு—ஏப்ரல், சுவடி 24; ஓ 3—இதழில், அவர் மேல் ஓர் அறப்பா (சாவப் பாடல்) எழுதினேம். அப்பாடலைப் பலரும் மறந்திருக்கலாம். சிலர் நினைவில் வைத்திருக்கலாம். 'இட்ட சாவம் முட்டுக' என்னும் தலைப்பில் எழுதிய 36 வரிகள் கொண்ட பாடல் அது. இதழ்களைக் காத்து வைத்துள்ளவர்கள் அக்குறிப்பிட்ட இதழைஎடுத்து இப்பொழுது பார்க்கக் கேட்டுக் கொள்கிறேம். (தொடரும்)

# அறம் கூற்றான அவலம்!

--த. அரிமா வளங்கோ, பிரான்சு.

'இட்ட சாவம் முட்டியது'! (பாடல்: சுவடி: 24; ஓ: 3. காண்க) சித்தரின் இனப் பகைப்பால் எழுந்த சொல்லே கூற்றானது! கணித்து அறிய முடியாதபடி ''கணிச்சிக் கூர்ம்பகைக் கடுந் தொழிலோன்'' இன்று தமிழ் இலக்கியம் காட்டிய கூற்றின் பிடியில், ''அரசியல் பிழைத்த'' காரணத்தால் 'அறமே கூற்'றாகி வரலாற்றைப் படைத்து விட்டது.

'ஏனோ தானோ' அரசியல் பேசி, ''எடுத்தேன்—கவிழ்த்தேன்'' என்று தருக்கி, ''எவனோ செத்தால் எனக்கென்ன'' என்று தன் நிலை அறியாமல், பிறர் நிலை அழிவதைக் கூசாமல்—நாணமல்—நடுங்காமல், ஆள்காட்டி விரல் காட்டிப் படுகொலைகள்—இனச் சீரழிப்புகளுக்கு ஊழ்வினையால் காரணமான கொடுமைக்கு அந்த ஊழ்வினையே உறுத்து வந்து ஊட்டிய வல்லடி கல்நெஞ்சக் கயவர்க்கும் குலைநடுங்கச் செய்வதாக ஆகிவிட்டது.

தமிழீழத்தில் வயல்களிலும் காடுகளிலும் சந்து பொந்துகளிலும், அரைகுறையாக அவரவர்க்குத் தெரிந்த—முடிந்த அளவுக்குப் பதுங்கு குழி வெட்டிப், பசியொடும் பிணியொடும உறவொடும் உயிர்கெட நடுநடுங்கிக் கிடக்கின்ற தமிழர்களை, வானின்று விழுந்த கொலை வெடி உயிர் குடித்துப் பேயாட்டம் ஆட அடிப் படையாகயிருந்தது எதுவோ, அது தகர்ந்து அவலத்தின் கொடுமுடிக்குக் கண்டோரையும் கேட்டோரையும் காலத்திற்கும் இட்டுச் சென்றுவிட்டது.

இன விடுதலை கேட்ட இளைஞரின் குரல்வளையை நசுக்கிய ஆணவக் கொழுப்பு உருகி ஓடியது!

ஆரியரின் நச்சு வேலைகளுக்குத் தூரிகையாய் நின்று செயல் பட்ட கொடுமைக்கு, அதே ஆரிய இராம வெறி ஏவிவிட்ட அம் பொன்றல் பலியான உண்மை என்றாவது ஒரு நாள் உலகிற்குத் தெரியத்தான் போகின்றது.

ஆர்.எசு.எசு.—இன் தூண்டுதலால் அண்ணலைக் கொன்றது அந் நாளில்! உள்கையாய் இருந்து ''ஆரியான'' என்று பஞ்சாயைப் பகிர்ந்துப் பார்ப்பனர்க்குத் தந்து துண்டாடிய குலக் கொழுந்தை, அந்த வினைமுதலே வினையறுத்து விட்டது!

எல்லும் அல்லும் தமிழினம் மீட்கின்ற மாபெரும் வினைக்கு, என்பும் தசையும் அளித்து, எழுத்தாலும் பேச்சாலும், பாட்டாலும், கருத்தாலும் கடமையாற்றுகின்ற இன நல ஏந்தல்—குல நலத் தோன்றல்—குடிமுதல் தலைவன் பெருஞ்சித்திரனாரின்—கள்ளங் கவடறியாத—துணைவலி ஏதுமற்ற—மேன்மைத் தமிழ் நெஞ்சத்தின் வலியால் வெளிப்போந்து 'இட்ட சாவம்'முட்டியது! அறத்தின் வலிமைக்கும் தமிழ்த் திறத்தின் புலமைக்கும் சான்றாக கூற்றினும் கொடிய சொல்லே கூற்றாகிப் பலித்தது! நல்லோர் நெஞ்சை நடுங்கச் செய்தால், குணக்குன்றன்னாரின் வெகுளி கண-

மேயும் காத்திட வொட்டாமல் அறம்பாடி எரிகின்ற தமிழின — தமிழ் ஈழ வேள்விக்கு உயிர்ப் பொருள் தந்துள்ளது! காணக் கண்ணுள்ளோர் காணட்டும். உணர மனம் உள்ளோர் உணரட்டும். கற்பழிப்புக் கலைகளாலும் கருத்தழிக்கும் வினைகளாலும் காசடித்து, மாசிழைத்து, ஆட்சிக்கு அங்காக்கும் அருவருப்புகள் இதனை உணர்ந்து பார்க்கட்டும். கிடைத்திட்ட வெறும் பதவிக்கு இனம் விற்றுத் தின்கின்ற இழிஞர்க்கும் (ஈனர்க்கும்) வீணர்க்கும் அறங் காட்டிய வரலாறு அறிவு கூட்டுமா? புறம் போக்கு நிலத்திற்கும் கரைப் போக்குப் பேச்சுக்கும் திறம் பழித்து வாழ்கின்ற தமிழ் மண்ணின் மைந்தர்க்கு, அறம் பாடிய பெருஞ்சித்திரப் பெருமை புரியுமா? ஏதிலிகளாக வந்த தமிழீழ மக்களையே மேன் மேலும்—நோகவைத்து—பிணம்பிடுங்கித் தின்கின்ற பேய்களைப் போல—பணம் பண்ணி வாழ்கின்ற அதிகாரச் சதிராடிகளுக்குக், கண் முன்னே நடக்கின்ற காட்சியின் மெய்ப்பொருளும் கனித் தமிழின் மாண்புகழும் தெரிக்கின்ற நாள் வந்து விட்டது!

பிறருக்குத் தீமை ஏதும் புரிந்து அறியாத—பகைக்கும் அருளும் தவமனம் கொண்ட இன நலப் பெரியாராம் பெருஞ்சித்திரனாரின் மனவலிமை, வரலாற்றில் அழியாமல் நிலை நிற்க இது போன்ற—''பல முன்னறிவித்தபடி பின் நடந்த நிகழ்ச்சிகள்''—காரணமாக அமையப் போவது உறுதி. ''சித்தனை—அறிவனைப் போல் சிந்தனை, செயல் எனக்கே!'' என்று கூறிய வாய்மையுரத்தினை இனியேயும் தமிழர்கள் உணர்ந்து, அவர் காட்டுகின்ற பாதையில் தமிழ் இன மீட்சிக்குத் துணை நிற்பார்களாக? ○

## அறிவியல் பேரறிஞர் இல.க.இரத்தினவேலு மறைவு!

'தென் மொழி'யின் தொடக்கக் காலத்திலிருந்து தொடர்ந்து பல வேறு வகையான அறிவியல் கட்டுரைகளைத் தென்மொழியில் எழுதி வந்தவரும், தென்மொழியின்பால் பெருமதிப்பும், பேரார்வமும், அதன் முன்னேற்றத்தில் பெரும் அக்கறையும் கொண்டிருந்தவரும், அறிவியல் பேரறிஞரும் ஆகிய, இல. க. இரத்தினவேலு அவர்கள் சிறிது காலம் உடல் நலக் குறைவாகச் சென்னைப் பொது மருத்துவமனையில் இருந்து, அண்மையில் மறைவுற்றார் எனும் செய்தி கேட்டு ஆறாத்துயரத்தில் செயலிழந்து நின்றோம். தூய தமிழுக்கு அவராற்றிய தொண்டு அளப்பரிது. அறிவியல் தனிமங்கள் அத்தனையையும் தூய தமிழில் மொழி பெயர்த்து ஏற்கெனவே தென்மொழியில் அவர் வெளியிட்டிருந்தார். தென்மொழி வரலாற்றில் அவரின் அரிய பணி என்றும் ஒளி விட்டுக் கதிர் வீசிக் கொண்டிருக்கும்.

அவரின் மறைவால் பெருந்துயர் கொண்டிருக்கும் அவர் குடும்பத்தார்க்கும், அன்பர்களுக்கும், உறவினர்க்கும் தென்மொழி தன் ஆழ்ந்த துயரத்தையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறது.

—பெருஞ்சித்திரனார்.

# இன்கா இனமக்கள்!

—மா. இளங்கோ. குளிபிறை.

தென் அமெரிக்காவில் பசுபிக் பெருங்கடலை ஒட்டி உள்ள நாடு பெரு. இந்நாட்டில் கி.பி. 16-ஆம், நூற்றாண்டின் இறுதி வரை மிகச்சிறந்த நாகரிகம் பரவி இருந்தது: இன்றைய பெரு, பொலிவியா. கௌதிமாலா ஆகிய நாடுகளில் வாழ்ந்த இனம் இன்கா என அழைக்கப் பெற்றது. இன்கா இனம், அமெரிக்காவில் வாழ்ந்த அமெரிக்க இந்தியர் அனைவருமே, இந்தியாவில் இருந்து நாடோடிகளாகப் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் சென்றவர்கள் என்பது ஆராய்ச்சியாளர்கள் முடிவு;

போர்க்குணமிக்க இன்கா இன மக்கள் குவிசுவா என்ற மொழியைப் பேசினர். இம்மொழிக்கு எழுத்து கிடையாது. நாட்களையும், எண்களையும் கணக்கிட கயிறுகளால் முடிச்சுப் போட்டுக் கொண்டனர். அதற்கென வண்ணக்கயிறுகளைப் பயன் படுத்தினர். இது சியுபெசு எனப்பட்டது; வான்வெளி பற்றிய மிகச்சிறந்த அறிவைப் பெற்றிருந்தனர்.

ஏறத்தாழ தென் அமெரிக்காவின் பரப்பளவில் பாதிக்கு மேல் ஆளுமை செலுத்திய இவர்கள் நல்ல சாலைகளை, கற்கள் பதித்த சாலைகளைப் பயன்படுத்தினர்; காரணம் இவர்கள் பயன்படுத்திய வண்டிகளுக்குச் சக்கரம் கிடையாது. தொடர் ஓட்டம் மூலமும், நல்ல ஓட்டக்காரர்கள் மூலமும் ஒரு நாளைக்கு 250 கல் தூரம் கடக்க முடிந்ததால், படைகளின் நிலைமை, செய்திப் பரிமாற்றம், உணவுப்பொருள் இருப்பு போன்ற தகவல்கள் உடனுக்குடன் கிடைத்தது.

இன்கா இனமக்கள் பெரிய கோயில்களையும், மாளிகைகளையும் கோட்டைகளையும் கட்டினர். கருங்கற்களைப் பயன்படுத்தினர். ஒரு கல்லின் எடை 100கல்லெடை(டன்) வரை இருந்தது. சக்கரம் இன்றி இவ்வளவு பெரிய கற்களை எப்படி இடம் மாற்றினார்கள் என்பதே வியப்புக்குரிய செய்தி;

கயிற்றுப் பாலங்களைக் கட்டியிருந்தனர்; பல நூறு அடிகளுக்குக் கூட கயிற்றுப் பாலங்களைப் பயன்படுத்தினர்; சிறிய அணைக்கட்டுகளையும் வாய்க்கால்களையும் பயன்படுத்தினர். இவர்களுக்குச் சோளமும், உருளைக்கிழங்கும் முதன்மையான உணவுப் பொருள்கள்; புதிய வேளாண் முறைகள் அரசு அதிகாரிகளால் அறிவுறுத்தப்பட்டுக் கண்காணிக்கப்பெற்றது. உரமிடப்பட்டது; பல் வகை அணிமணிகள், கருவிகள் செய்யப் பழகி இருந்தனர்; இசையும் கலையும் மிக வளர்ந்திருந்தன;

இன்கா இன மக்களின் மன்னர் கடவுள் தன்மை பொருந்தியவராக, இறைவனுக்கு இணையாக மதிக்கப் பெற்றார்; கதிரவ வணக்கமும், மூதாதையார் வணக்கமும் நிலவின; மன்னர் இறந்ததும் மகன் பதவி ஏற்றார். 15-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த மன்னர் வீர கோச்சாவும், அவனுக்கு பின் வந்த

Scanned with CamScanner

## அன்பர்களுக்கு ஓர் அறிவிப்பு

### 1, தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம்--விலையேற்றம்!

அச்சீட்டுத் தாள்களும், மை முதலிய அச்சுப் பொருள்களும் நாளுக்கு நாள் நஞ்சு போல் விலையேறிக் கொண்டே உள்ளன. கடந்த ஆண்டே நம் தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம்—ஆகிய மூன்று இதழ்களின் விலைகளையும் கட்டாயம் ஏற்றி விற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இருப்பினும் நம் அன்பர்களுக்குச் சுமையிருக்கக் கூடாது என்ற எண்ணத்தால் நாமும் இயலும் வரை அமைந்திருந்தோம். இதழ்ச் சந்தையில் நம் உடனொத்த அனைத்து இதழ்களையும் கண்ணை மூடிக் கொண்டு விலை கூட்டியிருப்பதை அனைவரும் அறிவர்:

ஆகவே இவ் விதழிலிருந்து நம் வெளியீடுகளின் விலை, ஆண்டு, அரையாண்டு உறுப்பினர் கட்டணங்களைக் கீழ்க் காணுமாறு விலை கூட்டியுள்ளோம். அன்பர்கள் இக் கூடுதல் விலையைப் பொருட்படுத்தாமல் அவற்றைத் தொடர்ந்து வாங்கிப் பயன் பெறுவார்களாக:

| | தனியிதழ் | ஆண்டுக் கட்டணம் | அரையாண்டுக் கட்டணம் | வாணாள் கட்டணம் |
|---|---|---|---|---|
| தென்மொழி | 3-00 | 36-00 | 18-00 | 500-00 |
| தமிழ்ச்சிட்டு | 1-50 | 18-00 | 10-00 | 250-00 |
| தமிழ்நிலம்: | 1-50 | 36-00 | 18-00 | 500-00 |

கடந்த காலத்தில் இத் தொகைக்கும கூட, குறைய விடுத்து உறுப்பினராகியிருப்பவர்களுக்கு அவரவர்கள் கணக்குக்கு ஏற்றவாறு இதழ்கள் நீடித்தும், குறைத்தும் விடுக்கப் பெறும். கட்டணங்கள் நிறைவடைகிற பொழுது புதுப்பிப்பிற் கென்று நினைவூட்டு மடல்கள் விடுக்கப் பெறும்.

(தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க)

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

பச்ச குட்டியும் சிறந்த போர் வீரர்களாக இருந்து நாட்டை விரிவு படுத்தினர்.

ஏறத்தாழ 400 ஆண்டுகள் தென் அமெரிக்காவின் சரிபாதிக்கு மேல் ஆட்சி செலுத்திய இந்த இனம் கி.பி. 1533-இல் இசுப்பெயின் நாட்டில் இருந்து துமுக்கி (துப்பாக்கி)களுடன் வந்தவர்களால் தோற்கடிக்கப்பட்டு, ஆட்சி மறையலாயிற்று:

மொழி, இசை, ஆளுமை, வேளாண்மை, பண்பாடுகளில் இன்கா இனம் மேலோங்கியிருந்ததை எண்ணி ஆராய்ச்சியாளர்கள் வியக்கின்றனர்: இதில் அதிர்ச்சி தரும் உண்மை என்னவென்றால் பெருவில் வாழ்ந்த இன்கா இன மக்கள் ஏறத்தாழ 15.000 ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டின் தஞ்சாவூர்ப் பகுதியில் இருந்து சென்றவர்கள் என்பதுதான்: ○

## 2. வெளியீட்டு மாதங்கள் பற்றிக் கவலற்க!

அஞ்சல் துறைச் சட்டங்களின் படி, இதழ்களை நடைமுறை மாதப் பெயரிட்டே அச்சிடுதல் வேண்டும். சில நேரங்களில் இரண்டு மூன்று மாத இதழ்கள் சேர்த்து அச்சிடப் பெறுகின்றன. இது நாள் வரை அவ்வாறு அச்சிடும் மாதங்கள் இதழ்களில் குறிக்கப் பெற்று வந்தன. அத்துடன் இதழ் வெளியீட்டு எண்களும் இணைத்து அச்சிடப் பெற்று வந்தன.

இனி அவ்வாறு குறிக்காமல், நடைமுறை மாதப் பெயரும், அடுத்து வரும் இதழ் எண்ணும் மட்டுமே அச்சிடப் பெறும். ஆனால் உறுப்பினர்களுக்கு விடுக்கப் பெறும் இதழ் எண்ணிக்கைகள் எவ்வகையானும் குறைக்கப் பெறா.

எனவே அன்பர்கள் அச்சிடப் பெறும் நடைமுறை மாதப் பெயர்களைப் பார்த்துக் குழப்பமடைய வேண்டா என்று கேட்டுக் கொள்கிறோம்.

—அமைச்சர்.

---

## புதுக்கோட்டை அண்ணலார் பு.அ. சுப்பிரமணியனார் மறைவு!

புதுக்கோட்டை வரலாற்றில் திருக்குறள் கழக அமைப்பாளர் அண்ணலார் பு. அ. சுப்பிரமணியனார் அவர்களின் பெயர் என்றென்றும் அருளொளி வீசிக்கொண்டிருக்கும் என்பதை, அவரால் கல்வி நலம் பெற்று வாழ்வில் மிக முன்னேறிய அறிஞர்கள், தலைவர்கள், பொது வாழ்வில் ஈடுபட்டவர்கள் முதலிய பன்னூற்றுக் கணக்கான உள்ளங்கள் மறவா என்பதில் ஐயமில்லை

அவ் வருஞ்செல்வரால்—அவரருளால் புரக்கப் பெற்றுத் தமிழுக்கு ஆக்கமாக நின்றவர், நிற்பவர் இருவர்: ஒருவர் மறைந்த பேரறிஞர் சி. இலக்குவனார்; மற்றவர் வாழ்ந்து கொண்டிருக்கும் பெரும்பாவலர் முடியரசனார். இவர்களைப்போல் பல் துறைகளிலும் அப்பெருந்தகையால் முன்னேறியவர் பலர். அத்தகைய பெருஞ்சிறப்புப் பெருங்கொடையாளராகிய அண்ணலார் பு. அ. சுப்பிரமணியனார் நம் பாலும், நம் தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ் நிலம் ஆகிய இதழ்களின் பாலும் பேரன்பும் பேரார்வமும், பெருந்துணையும் கொண்டு இலங்கினார். 93 அகவையடைந்த அவரின் இறுதிக்காலத்தும் நம் இதழ்களை விடாது படித்தும், பலரையும் படிக்கக் கூறியும் பெருந்தொண்டராக இருந்தார்.

அவர் கடந்த 11-5-91-இல், சில நாள்கள் நோய்வாய்ப்பட்டிருந்து மறைந்து புகழுடம்பாயினார் என்பது நமக்கு பெருந்துயர் தந்தது. அவரின் மறைவு தென்மொழிக் கேற்பட்ட பேரிழப்பு. அண்ணாரின் மறைவால் துன்புறும் அவரின் குடும்பத்தார்க்கும், உற்றார் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், அன்பர்களுக்கும் தென்மொழி தன் அளவிலாத் துயரத்தையும், இரங்கலையும், ஆறுதலையும் கூறிக் கொள்கிறது. அவரின் பெரும்புகழ் என்றும் வாழ்க!

—பெருஞ்சித்திரனார்.

# பாவலரேறு பாராட்டு மாலை!

(ஒரு தொகுப்பு)

## என் பண்ணவர், பாவலரேறு ஐயா! —அழகுநிலவன்.

மீளிமைமிகு பாவல ரேறே!—தமிழ்
    மொழி இனம்நாடு காத்திடத்
தாளிகை மூன்றினைத் தந்தே—நம்
    தமிழ்இளைஞர் வீறு பெற்றிட
ஆளியைப்போல் மேடைகளில் முழங்கி—மனம்
    ஆர்த்தெழ வைக்கின்ற ஐயா!
வேலியாய் விளங்கித்தனித் தமிழை—உம்
    விரல்களால் காத்துவரும் வேந்தே!

உண்மைத் தமிழரின் நெஞ்சில்—நல்
    உயிராய் நிறைந்த வரே!
திண்மை மிகுந்த வரே!—உம்
    திருவுளத்தை வணங்கிமகிழ் கின்றேன்!
அண்மையில் தஞ்சையிலே நானும்—உம்
    ஆர்தமிழ் உரையினைக் கேட்டுப்
பண்ணவரே! பரவசமடைந் தேனே!—நம்
    பாவேந்தரைப் பற்றிநன்கறிந் தேனே!

ஒள்ளியர் உம்முடை எழுத்தும்—நல்
    உரையும் பாட்டும் இனிக்கும்!
உள்ளபடி சொல்லப் போனால்—என்
    உள்ளமும் உணர்வும் உம்மை
உள்ளுதல் ஒன்றாய் இருக்கும்!—அதை
    உயர்வாய்க் கருதிச் செருக்கும்!
வள்ளுவரே மீண்டிங்கு வந்தார்—உம்
    வடிவில் என்பேன், மெய்யே!

## தமிழ்வளர மெழுகெனவே தேயும் சான்றோன் !

பெருஞ்சித்தி ரனாரவர்கள் புலமை ஊற்றாம்!
    பண்டுவாழ்ந்த இவர்பெயரோன் போலும் அன்னார்
பெருமைமிக்கத் தமிழ்க்கடலாம் பாரில் இன்று!
    பீடுடைய அவர்பாடல் பெருமை சேர்க்கும்!

தமிழாலே வாழ்பவர்கள் நிலத்தில் உள்ளார்!
    தமிழுயர இவர்வாழ்வார் நாளும் இங்கு!
தமிழ்வளர மெழுகெனவே தேயும் சான்றோர்!
    தமிழுலகம் அவரையென்றும் நெஞ்சில் வைக்கும்!

பாவாணர் கண்டெடுத்த பசும்பொன் னாவார்!
    பைந்தமிழ்த்தாய்ப் பெற்றெடுத்த மாண்புச் செல்வன்!
பாவியற்றிப் பார்திருத்தும் பொங்கும் வெள்ளம்!
    பழுத்தபெரும் சங்ககாலப் புலவர் போன்றார்!

உயர்ந்தமலை விளக்கெனவே ஒளிர்வார் பாரில்!
    உயர்த்தி விட்டார் பலபேரை உலகு மெச்ச!

Scanned with CamScanner

உயர்ந்திடவே விரும்புகின்ற ஊக்கம் உள்ளார்
உறுதியுடன் அவர் வழியில் உழைப்பீ ரிங்கே!

(வேறு)

பாட்டாலே உலகீர்க்கும் புலவ ரேறே!
பணிந்தும்மை வணங்குகின்றேன் பொங்கல் நாளில்!
நாட்டினிலே நம்தமிழர் நிலையும் ஓங்க
நாளெல்லாம் உழைக்கின்ற தமிழர் கோவே!
வருகின்ற தலைமுறையார் வகையாய்க் கற்க
வழிகாட்டும் தமிழ்க்கடலே! வாழி நீடு.
அருள்வள்ளல் இராமலிங்கர் அருளால் நீரும்!
ஆண்டாண்டுத் தமிழ்ப்பணியை ஆற்று வீரே!

—கருவை, மணவழகன்.

## இந்த நூற்றுண்டில் இருவர் பாவலர்.

— பாவலர் இளஞ்சித்திரன்-

இந்த நூற்றுண்டில் இருவர் பாவலர்
இந்தத் தமிழ்நில மண்ணின் விடுதலை
எண்ணி உழைத்தவர்! (இந்த)

பைந்தமிழ்ப் பாவேந்தர் பாரதிதாசன் ஒருவர்;
பாவலரேறு பெருஞ்சித்திர ஞர்மற் றொருவர்! (இந்த)

வந்த வடமொழி யால்வந்த தீங்குகள் கொன்றவர்!
வழிவழி யாய்வந்த சங்கத்தமிழ் மரபினில் நின்றவர்!
சிந்தை யில்வீரம் வரப்புரட்சிப் பாடல்கள் தந்தவர்!
செந்தமிழ் மக்களைத் தட்டியெழுப்பும் கொள்கையில்
துணிந்தவர்! (இந்த)

இந்தித் தீயை அணைக்கச் சங்கம் முழங்கியவர்;
எந்தமிழ் அரசிங் கமையப்போர்ப் பயிற்சி வழங்கியவர்;
முந்து பகைகளை வென்றிடவே வஞ்சி சூடியவர்!
முத்தமிழ் மக்களைப் போர்க்களத் தழைக்கப்
பாடியவர்! (இந்த)

ஆரியப் பார்ப்பனர் மாயையைச் சுட்டிக் காட்டியவர்;
அதிலினம் கெட்டிட்ட கேடுகள் களையவாள்
தீட்டியவர்!
நேரிய தமிழ்கொண் டினத்திற் கெழுச்சி ஊட்டியவர்!
நெருப்பென நின்றெதிர் முகங்களைக் கனவிலும்
வாட்டியவர்! (இந்த)

சாதியைச் சாய்க்கக் கண்களை வேல்களாய் ஆக்கியவர்!
சமயப் பழங்கதை மடமைகள் வீழத் தாக்கியவர்!
சூதினர், சூழ்ச்சியர் அரசிய லில்விழா வேங்கையர்!
சொல்லிடில் எதற்கும், எவர்க்கும் வணங்காப்
பாங்கினர்! (இந்த)

அன்னைத் தமிழ்க்கெதிர் பேசுவார் வாய்களைப் பூட்டியவர்!

அவன் தமிழ்க் கொடியை உயர்த்தவே தமிழரைக்
கூட்டியவர்!
பொன்னைப் போலிவர் இருவரும்; தமிழாய்ப் பிறந்தவர்கள்
பொய்யிலாத் தொண்டில் சிறந்தவர்; தந்நலம்
மறந்தவர்கள்! (இந்த)

## பாவலர்க்குள் ஏறுகும் சித்திரனர்!

தூயதமிழ் வளர்ச்சிக்குத் துறைதோறும்
கடனாற்றும் துரையே! மேலாம்
ஆய தமிழ் இனத்திற்கும் அம்முறையே
காணற்கிங்(கு) ஆர்த்தெ ழுந்து,
பாயுமோர் அரிமாவே! பைந்தமிழால்
பகைநடுங்கப் பாவெ டுத்துச்
சாயுமா றடிக்கின்ற சான்றாண்மைக்
கென்தலையைத் தாழ்த்து வேனே!

நடுக்கமிலா நெஞ்சுரமும் நலிவில்லாச்
சிந்தனையும் நலம்பெ ருக்க
அடுக்கடுக்காய்த் துன்பங்கள் அடுத்தடுத்துக்
கோடுபோல் எழுந்திட் டாலும்
மிடுக்குடனே தோளுயர்த்தித் தூவலெனும்
வில்லெடுத்துக் கணைகள் பூட்டித்
தொடுக்குமோர் ஆசிரிய உரையொன்றே
துணையாகும் தமிழர்க் கென்பேன்!

வேராகும் தமிழர்ப்பண் பாட்டிற்குக்
காப்பியமும் தொகைநூல் எட்டும்
நேராகும் படியெமக்கு நீட்டுவித்தார்
'மாணிக்கம்' 'நூறு சிரியம்'!
பேராகும் பாவலர்க்குள் ஏறுகும்
சித்திரனர் பாவன் மைக்கே!
யாராகும் படிநிற்பார், பாவேந்தர்
பேராற்றியநம் பாவ லர்க்கே?

--பாவலர். அ. பு. திருமாலன்--
தலைவர், தமிழ் நெறிக் கழகம், செலாமா, மலேசியா

## பைந்தமிழ் காக்கும் பாவலரேறு!

ஏட்டிலே புதுப்பு ரட்சி;
எழுச்சியில் மறும லர்ச்சி;
பாட்டிலே உணர்ச்சி; பேச்சில்
பனிநீரின் குளிர்ச்சி; கேட்போர்
சூட்டிலே தமிழ்வ ளர்ச்சி;
சொல்வில் நீர் வீழ்ச்சி; நாட்டின்

மீட்பிலே கிளர்ச்சி செய்யும்
 வீறுபா வலராம் ஏறு!

சுட்டுவார் தமிழ்கெ டுக்கும்
 துறையினை; உணரா விட்டால்
திட்டுவார்; மொழிக்குத் தீங்கு
 செய்வோர்கள் உறவா னாலும்
வெட்டுவார்; மட்டு வார்ப்பண்
 மீட்டுவார்; புகழால் விண்ணை
எட்டுவார்; பகைமுன் பாய்ந்து
 முட்டுவார் எங்கள் ஏறு!

மடுத்திடும் தமிழை வஞ்சர்
 மறைத்திடல் கண்டு, நெஞ்சம்
துடித்திடும்! மீட்பத் துஞ்சல்
 துறந்திடும்; பகைக்கஞ் சாது
வெடித்திடும்; எதற்கும் கெஞ்சல்
 வெறுத்திடும்; புகழைப் பஞ்சாய்
விடுத்திடும்; உளத்தில் பிஞ்சை
 வென்றிடும் எங்கள் ஏறு!

நத்திடும் நரியைப் பாட்டால்
 நசுக்கிடும்; தமிழைச் சொல்லி
எத்திடும் எலியைப் பேச்சால்
 இடித்திடும்; தமிழர்க் காகக்
கத்திடும்; கடல்க டந்தே
 கவின்தமிழ் உணர்வே நெஞ்சில்
வித்திடும்; அறிவால் ஆழி!
 வென்றிடும் எங்கள் ஏறு!

கெடடாநற் றமிழை என்றே
 கீழறுப் பார்த லையை
எடடாஎன் றேவும் ஏறு!
 எதிர்த்திடும் களத்தில் பாய்ந்து
விடடாஒர் கைபார்ப் போம்என்(று)
 எழுந்திடும் வீறு! மாந்தர்
'அடடா! உன் தொண்டும் என்னே!
 எனப்போற்றும் ஆற்றல் ஏறு!

-பாசறை தனிக்கொடி-
தைப்பிங், மலேசியா.

---

## அன்பர்கள் கவனிக்க

பல வகையான அச்சக நெருக்கடிகளாலும், புறநிலை இடர்ப்பாடுகளாலும் இதழ்கள் காலந்தாழ்ந்து வெளி வருகின்றன. அன்புள்ளங்கள் பொறுத்துக் கொள்க.

—ஆசிரியர்

# விழிப்ப தெங்கே?

--தமிழவேள்--

பொய்யான திரைப்படமும் புரட்டான
    அரசியலும் போதா வென்று
தெய்வீகம் எனும்பெயரால் நிகழ்கின்ற
    திருக்கூத்தும் இடையீ டின்றிச்
செய்கின்ற மயக்கத்தால் நேர்கின்ற
    சீரழிவில் சிக்கிக் கொண்டே
உய்வதற்கு வழியறியார் உண்மையினை
    உணராதார் விழிப்ப தெங்கே?

பெரும்பதவி அரசியலில் பெற்றவரும்
    பாராட்டிப் பின்செல் வோரும்
பெரும் பொருளைச் சேர்த்தவராய்த் திரையுலகில்
    புரள்வோரும் பின்னுள் ளோரும்
வருங்காலம் உரைப் போராம் சோதிடரை
    வணங்குகிறார் : குருமார் தம்மின்
திருவடியில் வீழ்கின்றார்—இவரெல்லாம்
    தன்மானம் பெறுதல் எங்கே?

நடமாடும் கோயிலெனும் ஏழையரோ
    நலிவுற்று நாளும் வாட,
படமாடும் கோயிலிலோ அன்றாடம்
    பெருஞ்செலவில் பூசை செய்து
கடவுளரின் பெயராலே விழாக்கண்டு
    களிப்படையும் கூட்டத் தார்தாம்
தடமாறிப் போகாமல் தம்மினத்தின்
    துயர்தன்னைத் துடைப்ப தெங்கே?

எல்லாம்செய் வல்லதுவாய் எங்குமுள
    தெய்வத்தை எண்ணிப் பார்த்து
நல்லமன அமைதியுடன் நாவாரத்
    தொழுதேத்தும் நெறியை விட்டுப்
பல்வேறு தெய்வத்தைப் பேதைமையாய்க்
    கூச்சலிட்டுப் போற்று கின்ற
கல்லாத மாந்தர்தாம் மொழி நலத்தை
    இனநலத்தைக் காப்ப தெங்கே?

பெரியாரின் பகுத்தறிவுத் தொண்டெல்லாம்
    பயனற்றுப் போகும் வண்ணம்
புரிநூலை அணிந்தவரை மேலோராய்ப்
    பார்க்கின்ற புன்மைச் சேற்றில்
தெரியாமல் காலூன்றி இன்றளவும்
    தெளிவின்றித் தாழ்ந்துள் ளோர்தாம்
உரிமைக்குப் போரிடவும் தம்மினத்தை
    உயர்த்திடவும் வருதல் எங்கே?

Scanned with CamScanner

# அத்திப்பூ!

நாடக ஆக்கம்: - அதியமான்

(பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் 'பாவியக் கொத்'தில் ஒரு மலர்!)

(காட்சி மாற்றம்)

அன் : உன் அன்னையிடம் சொன்னாயா?

கயல் : இல்லை.

அன் : ஏன்?

கயல் : சொன்னால் என்னைக் கொன்றிருப்பார்கள்.

அன் ; ஆமாம், கயல், இக்குற்றத்தை நீ செய்யவில்லையே!

கயல் : அதை எவன் ஆராய்வான்? நான் பெண்; எனவே ஆண் செய்த குற்றத்திற்குப் பெண்ணுக்குத்தான் தண்டம்.

அன் : ஆமாம்; அதற்காக நீ யாரிடமும் கூற வில்லை அப்படித்தானே?

கயல் : ஆமாம்.

அன் ; அப்படியானால் என்னிடமும் சொல்லாமல் இருந்திருக்கலாமே!

கயல் : வாய்மையை மதிக்கும், அன்பும், தூய்மையுமான உள்ளமும் உங்களிடம் இருப்பதாக எண்ணியே உண்மையைக் கூறிவிட்டேன்.

அன் : கயல்! எவ்வளவுதான் அறிவும், அன்பும் இருந்தாலும், ஒரு கற்பிழந்தவள் என்று ஒரு பெண்ணே தன்னை ஒப்புக் கொண்டபின், அவளோடு உள்ளம் சேர்ந்து வாழ்வது என்பது முடியாததாகவே தோன்றுகிறது. எத்தனையோ சீர்திருத்த நூல்களை நான் படித்திருக்கிறேன். இப்படிப் பட்ட நிலைகளை எதிர்த்துப் புரட்சி செய்ய எண்ணி இருந்தாலும், கற்பிழந்தவள் எனத் தெரிந்தபின், படித்தவை யாவும் இப்போது ஏட்டுச் சுரைக்காயாகத்தான் தோன்றுகிறது. உன்னோடு நான் வாழ முடியுமா? மனம் குழம்புகிறதே!

கயல் : அத்தான், கற்பிழப்பு என்பது குற்றமானாலும் அது களையப்படவேண்டியது என்று சொன்னீர்களே!

அன் : சொல்லுக் கென்ன பஞ்சமா? நீ சொன்ன சொல் நஞ்சாகத் தெரிகிறதே.

கயல் : என் உள்ளத்தைத் தேர எப்படி யெல்லாமோ பேசி, உண்மையை மதிப்பதாய்க் காட்டி, உண்மை வெளியில் வந்ததும், மன்னிக்காமல், பிழை பொறுக்காமல், என்னை வறுத்தெடுக்கத் துணிந்து விட்டீர்களே! நான் சிறிது நேரத்திற்கு முன்னால் அழுதேன்; துடித்தேன்; நீங்கள் என்ன சொன்னீர்கள்?

அன் : சொன்னேன். உனக்கு உள்ளம் இருந்தது. அதில் உணர்ச்சியும் இருந்தது. இது முதல் இரவு என்ற நினைவிருந்தது.

நீ இந்த அறைக்குள் நுழையும் போது உனக்கு வாழ்க்கை இருந்தது. என்றாலும் நீ அழுதாயே, அ'து ஏனென்றறியாமல் அதைப் புரிந்து கொள்ளப் பேசினேன்.

கயல்: அப்படியானால், அவையெல்லாம் பொய்தானா?

அன் : உன்னை மெய்யானவள் என்று எண்ணினேன். நான் உன்னைக் கண்டபோது, உன்னிடம் காதல் இருந்தது; நம் உணர்ச்சிகள் இயங்க இடமிருந்தது. இருள் இருந்தது; தனிமை இருந்தது; நாம் இருவரும் ஒன்றிப்போகும் நிலையும் இருந்தது. என்னிடம் பசி இருந்தது. அதனை நீக்கப் பரிமாற வேண்டியவள் பதறி அழுகிறாளே. ஏன் என்று திகைத்தேன். உன் நிலையை அறிய விதைத்தேன் சொற்களை; அதன் விளைச்சல் பகை போலாயிற்று.

கயல்: அப்படியானால் என்னை அப்போது பார்க்கும் போது பகை உணர்ச்சி உண்டாக வில்லையா?

அன்; அதெப்படி உண்டாகும்? உன்னிடத்தில் எதில் குறை இருந்தது? இன்பம் இருந்தது. உடல் இருந்தது. என்னைக் கட்டி அணைக்க உன்னிடம் கைகள் இருந்தன. என்னிடம் ஆல்போல் தோளிருந்தது. அதில் நீ சாய உயிரும் உடலும் உனக்கு உண்மையாக இருந்தன. காதல் இருந்தது. கண்ணால் பேச உன்னிடம் கனப்பு இருந்தது. களிப்பிருந்தது எனக்கு. உனக்குக் கலக்கம் இருந்தது. அதனை நானறியாமல் உன்மீது எனக்கு இரக்கம் இருந்தது. பகை எப்படி இருக்கும்?

கயல்: நகைக்க வேண்டியதுதான். இங்குப் பால் இருந்தது; அதனை எடுத்துக் கொடுக்க எனக்கு மனம் இருந்தது; ஆனால் என் முன்நிலையை எண்ண நினைவிருந்தது; அதனால் அழுதேன்: அதை மறைக்க உங்களுக்குத் திறமை இருந்தது. அதைக் கண்டு நான் ஏமாறாமல் இருக்க அறிவில்லாமல் போயிற்றே.

அன் : நீ அழுததை ஊடல் என எண்ணி இருந்தேன்: எனவே கூடலில் நீ எனக்கு முத்தம் தருவாய் என்று நான் எண்ணியதில் ஏமாற்றம் இருந்தது. அதைப் புரியத் தெரியாமல், நான் புதியவன் அதனால் உனக்குப் புத்துணர்ச்சி ஊட்ட உன்னைத் தேற்றினேன். என்னையே என்னை நான் ஏமாற்றிக் கொண்டதாய் இப்போது உணர்கிறேன்.

கயல் : அத்தான், இப்போது எனக்குக் கவலையாக இருக்கிறது: உண்மையைச் சொன்னால், அது உயிரைக்குடிக்கும் என்பதை அறிந்துதான் பொய் வளர்கிறது: குற்றத்தை உணர்ந்தால் மெய் வெளியில் வரும். அந்த மெய் தண்டனைக்கு வித்தாகக் கூடாது. பொய்யும் மெய்யாகத் தோன்றும்; அதனால் தண்டனைக்குக் குற்றமே மூலமாக வேண்டும்;

அன் : அப்படியானால்; உனக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்?

கயல் : தண்டனை பெறவேண்டியது நானல்லள் என்பதை இன்னுமா நீங்கள் தெரிந்து கொள்ளவில்லை?

Scanned with CamScanner

அன் : அவன் யாரென்று தெரியவில்லை; அப்படியே ஆய்ந்து பார்த்தால் உன் ஒழுக்கத்தை அழிப்பதற்குக் கரணியம் உன்னழகு.

கயல் : அவ்வழகை எனக்கீந்த இயற்கையே தண்டனையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அன் : உன்னைக் குலைத்தவன் யார்? தெரியாது. உனக்கு அழகைத்தந்தது இயற்கை, இரண்டுக்கும் தண்டனை கொடுக்க முடியாது. எனவே நீ தான் தண்டனையைப் பெற்றுக் கொள். ஆனால் ஒன்று. உன்மேல் அருள்காட்ட எண்ணம்தான். அதனால் உன்னைப் பிழைத்தவனைக் கண்டு சொன்னால் அவனோடு உன்னைச் சேர்த்து வைக்கிறேன்.

கயல் : அத்தான், அப்படியானால் என்வாழ்வு இந்த முதல் இரவோடு இறுதியாகி விடுமா?

அன் : அப்படித்தான் நானும் நினைக்கிறேன்.

கயல் : நான் உண்மையைச் சொல்லாதிருந்தபோது என்னிடம் எம்படி நடந்து கொண்டீர்கள்? நினைத்துப் பாருங்கள்.

அன் : அஃது இயல்பான ஆணின் குணம். காமத்துக்குக் கண்ணுமில்லை. காதுமில்லை.

கயல் : அப்படியா? அத்தான் நான் நினைத்ததுதான் சரி; அது நிறைவேறப் போகிறது.

அன் : அஃது என்னவோ?

கயல் : நானாக என்னுடைய கற்பொழுக்கத்திலிருந்து தவறவில்லை; என்னைக் கற்பிழக்கச் செய்தவன் ஓர் ஆண். அது நடந்தது நடந்ததேதான். அதை நான் கூறவில்லையென்றால் உங்களுக்கும் அது தெரியாமல் போயிருக்கும். என்னை அழித்தவனும் கற்பிழந்தவன்தான். ஆயின், அவன் ஒரு பெண்ணோடு வாழ முடியும். ஆனால் நான் மட்டும் உங்களோடு வாழ முடியாது. எனக்கு மன்னிப்பு இல்லையென்றால் நான் நினைத்தபடி ஒரு நல்லவரிடம் இந்த விளக்கத்தைக் கூறி விட்டு, உயிரை விட்டு விட வேண்டியதுதான். அந்த நல்லவர் நீங்கள் என நான் எண்ணியதும் தவறாக முடிந்து விட்டது.

அன் : ஏன்?

கயல் : உங்களை நல்லவர் என்பதால்தான் உண்மையை உள்ளபடி சொன்னேன். இல்லையென்றால், கடந்த மூன்றாண்டுகளும் மறைத்து வைத்திருந்த என் கற்பிழப்புச் செய்தியை உங்களிடம் சொல்லி இருக்க மாட்டேன். ஒரு பெண்ணுக்கு வாழ்வளிப்பீர்கள் என எண்ணி ஏமாறி விட்டேன்.

அன் : அதனால்...!?

கயல் : இனி என் உயிரைப் போக்கிக் கொள்கிறேன். (அண்மையிலிருந்த மின்சாரக் கம்பியில் பாய்வதற்கு ஓடுகிறாள்.)

அன் : (பிடித்து இழுத்து) வேண்டாம் கயல்! உன்னைக் கற்பழித்தது நான்தான்! நானேதான்!

கயல் : (உணர்வும் சினமும் பீறிட்டுப் பொங்கியெழுந்து, கையை ஓங்கி ஓங்கி, ஏராளமான முறை அவனுடைய கன்னத்தில் மாறி மாறி அறைகிறாள்) என்னைக் கெடுக்கலாமா? என்னைக் கெடுக்கலாமா, கரிசனே!

அன் : அதனால்தான் உன்னை நான் மனைவியாக ஏற்றுக் கொண்டேனே! (ஆசையும் அன்பும் அமைதியும் பொங்க அவளைத் தன்னோடு அணைக்கிறான்.) (கயல் கண்ணீரும் கம்பலையுமாகக் கேவிக் கேவி அழுது கொண்டே அவன் மார்பில் சாய்கிறாள்.)

அஞ்-ஆள் : (சேவல் கூவுகிறது: விடிந்து விட்டது) ஐயா! தொலைவரி (தந்தி):

கயல் : (கதவைத் திறந்து தொலைவரியைப் பெற்று அன்பரசனிடம் கொடுக்கிறாள்)

அன் : (தொலைவரியை வாங்கிப் பிரித்துப் படிக்கிறான்.)

கயல்: தொலைவரியில் என்ன உள்ளது?

அன் : என் நண்பன் முத்தப்பன் என்பான் வெளியூரிலிருந்து வருகிறானும். அவனைத் தொடர் வண்டி நிலையத்தில் வந்து சந்திக்கும் படி தொலைவரி கொடுத்திருக்கிறான்.

கயல்: போக வேண்டுமோ?

அன் : ஆமாம்: கட்டாயம் போக வேண்டும்:

கயல்: முதல் இரவு?

அன்: இன்று இல்லை: நாளை!

கயல்: சரி, உங்கள் விருப்பத்திற்குக் குறுக்கே நான் நிற்க மாட்டேன்:

அன்: கயல், நான் இப்போது தொடர் வண்டி நிலையத்திற்குப் போகிறேன். என் நண்பனைச் சந்தித்து வீட்டிற்கு அழைத்துக் கொண்டு வருவேன்.

கயல்: அழைத்து வாருங்களேன்!

அன் : நீ, என்ன செய்ய வேண்டும் தெரியுமா? நல்ல நல்ல உணவு வகைகளை அணியஞ் செய்து வை. உன் கைப்பட, நான் இன்னும் உண்ணவில்லையே! நான் விரைவாக வந்து என் நண்பனோடு அமர்ந்து உண்டு மகிழ்வேன். (கன்னத்தைச் செல்லமாகக் கிள்ளி விட்டு போகிறான்) வருகிறேன்.

பாட்டு

(புன்னகை வராளியில் பாடிப் பார்க்கலாம்)

எத்தனையோ நல்ல நல்ல பெரியோர் தோன்றி—இங்கு
முத்தான கருத்துகளைச் சிந்தித்தார்; சொன்னார்:
அத்தனையும் வீணாகப் போகவில்லை—பல
ஏமாற்றுவோர் இருந்தும் சாகவில்லை;

மெய்யைச் சொன்னாலும் குற்றமென்பார்—அஞ்சி
பொய்யைச் சொன்னாலும் சீற்றம் கொள்வார்.

கொலையுஞ் செய்வார் பின் மறைத்திடுவார்—ஆண்கள்
கூடியே சேர்ந்து பெரும் பழி தூற்றுவார்.

# மட்டைப் பந்துக் காரரின் முட்டாள் தனப் பேச்சு!

தஞ்சை நலங்கிள்ளி, அமெரிக்கா.

வட இந்திய ''இந்தி''க்கார அரசு (தில்லி அரசு) நடத்துகின்ற தொலைக்காட்சி (Television) இந்தித்திணிப்பு முயற்சிகளில் முனைப்பாக ஈடுபட்டுள்ளதை யாவரும் அறிவர். இந்தியைத் திணிப்பதோடு மட்டுமல்லாமல், நமது தமிழ்மொழியைப் பற்றி ஏளனமாகப் பேசுவதிலும் வட இந்திய அரசின் தொலைக்காட்சி ஈடுபட்டுள்ளதாகத் தெரிகிறது. ஓரிரண்டு ஆண்டுகளுக்கு முன்னால், தொலைக் காட்சியில் காட்டப்பட்ட 'நெசு கபே' என்னும் குளம்பிப் பொடி (காப்பிப் பொடி) விளம்பரத்தில், தமிழ் ஏளனமாகப் பேசப்பட்டதாகவும், ''தமிழர்கள் கூடத் தமிழைப் படிக்க வேண்டியதில்லை'' என்று ஒளிவு மறைவாகச் சொல்லப்பட்டதாகவும் தெரிகிறது.

இரவிசாத்திரி என்னும் மட்டைப்பந்து (கிரிக்கெட்) விளையாட்டுக்காரர், அந்தத் தொலைக்காட்சி விளம்பரத்தில் ''எனக்குத் தமிழ் நல்லா வராது. ஆனால் காப்பியைப் பற்றி நல்லாத் தெரியும்'' என்று கூறுகிறார். இரவிசாத்திரி என்ற இவர் புகழ் பெற்ற மட்டைப் பந்து (கிரிக்கெட்) விளையாட்டுக்காரர். தமிழ்நாடு மற்றும் இந்திய மாநிலங்களிலுள்ள மாணவ மாணவியர் பலர் இவரைப் போன்ற புகழ்பெற்ற மட்டைப் பந்து விளையாட்டுக்காரர்களைப் பெரிதாக எண்ணி, அவர்களைப் போலவே நடையுடை, நடைமுறை(பாவனை)களில் ஈடுபட முயல்கிறார்கள், அதனால்தான் இரவிசாத்திரி போன்றோர் குளம்பிப்பொடி (காப்பிப் பொடி), வழலைக்கட்டி (சோப்பு), பற்பொடி போன்ற பொருள்களின் சார்பில் தொலைக்காட்சியில் பேசி, மாணவ மாணவியரும் இன்ன பிறரும் இப்பொருட்களை வாங்கும் படி ஏவுகிறார்கள், அதைப்பற்றி இங்கு நாம் குறைவு பேசவில்லை; இந்த விளம்பரத்தில் இரவிசாத்திரி ''நெசு கபே நல்லது, அதை வாங்குங்கள்'' என்பதோடு நிறுத்திக்கொள்ள வில்லை. ''எனக்குத் தமிழ் நல்லா வராது'' என்றும் கூறுகிறார். இவருக்குத் தமிழ் நன்றாகத் தெரியாததற்கும், குளம்பி நீரைப் பற்றி (காப்பியைப் பற்றி) நன்றாகத் தெரிவதற்கும் தொடர்பேதுமில்லை. ''நான் மட்டைப் பந்து விளையாடும்போது நிறையக் காப்பி குடிப்பேன்; அதனால் எனக்குக் காப்பியைப் பற்றி நன்றாகத் தெரியும்'' என்று கூறுவாரேயானால், அதைப்பற்றி நாம் குறைகூறப்போவதில்லை; ஆனால் குளம்பி நீர் (காப்பி) குடிப்பதற்கு எந்தவகைத் தொடர்பு மற்ற தமது தமிழறிவின்மையைப் பற்றிக் கூறுவதேன்? இந்தத்

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

எந்த ஆணும் எவனோடும் பேசலாம்—ஒரு
பெண் ஆணைப் பார்த்தால் வரும் ஐயம் நீங்காது!
ஆணுக்கு ஒரு ஞாயம் இருக்கும் வரை—இங்கு
அடிமை வாழ்வு நீங்காது குடியும் வீழும். (திரை.)

(தொடரும்)

Scanned with CamScanner

தமிழ் அழிப்பு முயற்சிக்குப் பொறுப்பாளி இரவிசாத்திரி அல்லர்! 'நெசுகபே' கொடுக்கும் பணத்துக்காக அவர்கள் எழுதிக்கொடுத்ததைத் தொலைக்காட்சியில் சொல்கிறார் இரவிசாத்திரி. அவ்வளவுதான். 'நெசுகபே' நிறுவனத்தின் வடஇந்திய முதலாளிகளும் (பார்ப்பனியத் தொடர்புடைய) வட இந்திய அரசு நடத்துகின்ற தொலைக்காட்சியுமே இந்தத் தமிழ் அழிப்பு முயற்சிக்குக் காரணம். தமிழக மாணவ, மாணவியருக்குப் பிடித்த இரவிசாத்திரி ''எனக்குத் தமிழ் நல்லா வராது'' என்று சொல்வதைக் கேட்டுத் தமிழக மாணவ, மாணவியரும் தமிழ்ப்படிப்பிலே ஈடுபட மாட்டார்கள். ''இரவிசாத்திரியைப் பார், தமிழ் நன்றாகத் தெரியாது நாம் ஏன் வீணாகத் தமிழ்ப் படிக்க வேண்டும்?'' என்று நினைத்துத் தமிழக மாணவ, மாணவியரும் தமிழ்ப் படிப்பில் அக்கறை காட்டமாட்டார்கள்; தமிழைப் புறக்கணிப்புச் (உதாசீனம்) செய்வார்கள்; வளருகின்ற தலைமுறையில் தமிழ்ப்படிப்பு சீரழியும் என்று திட்டமிட்டுச் செய்யப்பட்ட தமிழ் அழிப்பு முயற்சியே (பார்ப்பனியத் தன்மை வாய்ந்த) 'நெசுகபே'யின் தொலைக்காட்சி விளம்பரம்.

'நெசுகபே'யின் வட இந்திய முதலாளியர் செய்த இந்தத் தமிழ் அழிப்பு முயற்சிக்கு முற்றிலுமாகத் துணை நிற்பது வட இந்திய அரசு நடத்துகின்ற தொலைக்காட்சி. ''இந்தியைப் பரப்பத் தொலைக் காட்சியைப் பயன்படுத்துவோம்'' என வெளிப்படையாகவே வட இந்தியத் தொலைக்காட்சி அதிகாரிகள் பல முறை கூறியுள்ளார்கள். இந்தியைத் தமிழர் தொண்டையில் திணிப்பதோடு மட்டுமல்லாமல், தமிழைப் பற்றிய இழிவான உணர்வைத் தமிழக மாணவ, மாணவரிடையே ஏற்படுத்தவும் வட இந்திய அரசின் தொலைக்காட்சி ஈடுபட்டுள்ளது.

''எனக்கு இந்தி நல்லா வராது. ஆனால் காப்பியைப் பற்றி நல்லாத் தெரியும்'' என்று ஒரு மட்டைப்பந்து விளையாட்டுக்காரர் தொலைக்காட்சியிலே சொல்வதற்கு வட இந்திய அரசு அனுமதிக்குமா? மாட்டாது. ஆனால், தமிழென்றால் ஏளனம்! வேலியில்லாப் பயிர்! எந்த மாடும், எந்தக் கழுதையும் தமிழ் நிலத்தில் மேயலாம்! தமிழ்மொழியை இகழ்ந்து பேசலாம். ஏளனம் செய்யலாம்!

இந்தியைத்திணிக்கவும், தமிழை அழிக்கவும் தொலைக்காட்சி பயன்படுத்தப் படுவதால்தான், அதுகண்டு பொறாது, உள்ளம் குமறிய தமிழ் இளைஞர் சிலர், கொடைக்கானலிலுள்ள தொலைக்காட்சி அமைப்பைக் குண்டுவைத்துத் தகர்த்தெறிய முனைந்தனர். அதற்காகத் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் அந்தத் தமிழ் அரிமாக்கள் அல்லர். தண்டிக்கப்பட வேண்டியவர்கள் தொலைக்காட்சியின் வழி இந்தியைத் திணிக்கவும், தமிழை அழிக்கவும் முற்படும் வட இந்திய அரசேயாகும்.

கொடைக்கானலிலுள்ள தொலைக்காட்சி அமைப்பை குண்டு வைத்துத் தகர்க்க முனைந்த தமிழ் அரிமாக்கள் குற்றவாளிகளல்லர்! அவர்கள் அனைவரும் போற்றப்பட வேண்டிய, புகழப்பட வேண்டிய தமிழ்த் தொண்டர்கள்! ○

(அட்டை 4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

○: 1461 என் அரும்பெறல் ஆசிரியரீர், வணக்கம். ''பாவேந்தர் நூற்றாண்டு நிறைவு விழா''வை முன்னிட்டுப் புதுவை அரசு 28-4-91 அன்று மாலை 7-00 மணியளவில் தலைமையரசுச் செயலகத்தின் முன் கடற்கரை வெளியில் ஒரு முழு நிலா முற்றம்'' பாட்டரங்க நிகழ்ச்சியை நடத்தியது. அந் நிகழ்ச்சிக்கு நான் ஒரு பாடலை அனுப்பியிருந்தேன். பாட்டு தெரிந்தெடுக்கப்பட்டுப் பாட்டரங்கில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டேன். நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பாடி வந்தேன்.

நிகழ்ச்சிக்குத் தலைமை – இரா. திருமுருகன் அவர்கள் என்னைப் பாட்டரங்கில் பாட அழைக்கையில் சொன்ன சொற்கள் மிகவும் வியப்பில் ஆழ்த்தின. மெய்சிலிர்க்க வைத்தது. அவர் சொன்னவை.

''பாவலரேறு பெருஞ்சித்திரப் பெருமகனாரை நீங்கள் கண்டிருப்பீர்கள். அவர் தம் மாணவர் இளஞ்சித்திரனாரைக் கண்டிருக்க மாட்டீர்கள். அழைக்கின்றேன்: காணுங்கள். அவரின் பாடலையும் கேளுங்கள்.

ஐயா, பாவேந்தரின் வழி நின்று அவரினும் மேலாக அவரின் உயரிய உயிர்க் கொள்கைகளாகிய தூய மொழி, இனம், நிலம், குமுகாய மீட்டெடுப்புக் கொள்கைகளைத் தம் தலை மேல் போட்டுக் கொண்டு செயல்பட்டு வரும் என் அரும் பெறல் ஆசிரியர் பாவலரேறு அவர்கட்குத் தமிழக அரசு நூற்றாண்டு விழாத் தொடக்கத்தின் பொழுதே ஒரு பெருஞ் சிறப்பு விருது அளித்து மதிப்புச் செய்திருக்க வேண்டும். அரசு அதனைச் செய்யவில்லை. மாறாக, போலிகட்கும், புல்லுருவிகட்கும், இனம் மொழி காவா எத்தர்கட்கும் விருதுகள் அளித்து விழா நடத்தியது எமக்கு வியப்பை ஏமாற்றத்தை அளித்தது. (இவருள் உண்மையாளரும் இருக்கலாம்). அவரை இனம் கண்டு கொள்ள விரும்பாத ஒரு பொய்யுணர்வு அரசிடமிருந்து யாமும் யாதொரு பரிசையும் பெற விரும்பவில்லை. இப்பரிசெல்லாம் கால வெள்ளத்தில் மூழ்கடிக்கப்படக் கூடியதே! உண்மையான விருது என்பது மக்களிடமிருந்து பெறுவதே! மக்கள் அளிக்கும் விருதே வரலாற்றில் நின்று நிலைப்பது. இப்படிக்கு அன்றும் இன்றும் என்றும் தங்கள் மாணவன், இளஞ்சித்திரன், சென்னை-48.

○: 1462: பேரன்புடையீர், பணிவன்புமிக்க வணக்கம். தாங்கள் விடுத்த 'தென்மொழி' இதழ் (சுவடி; 25, ஓலை: 12) இன்று தான், பிற்பகல் மூன்று மணியளவில் கிடைத்தது. நெஞ்சு நிரம்பிய நன்றி. இதழின் அனைத்துப் பக்கங்களையும் சுவைத்த பின்பே இம் மடலை எழுதுகிறேன். ''பாவேந்தர் பரிசுக்குரிய தலை மகன் பாவலரேறே'' என்கிற பேருண்மையைத் திருச்சி மிகுமின் தொழிலகம் (BHEL) முத்தமிழ் மன்றம் உணர்ந்து, அப் பெருமகனுக்குரிய பாராட்டும், பரிசும் வழங்கிய செய்தி, என் செவிக்குத் தேனாய் இனித்தது.

வாழ்க பாவலரேறு வளர்க அவர்தம் பணி!!

தங்கள் அன்புள்ள, —செ. மாது அந்தோணி தாசு வெங்காலூர்-8

Scanned with CamScanner

ஓ: 1463 பேரன்புக்குரிய ஐயா, வணக்கம். உடல் நலம் மிகக் குன்றியிருந்ததையும் பொருட்படுத்தாது அடியேனின் பொருட்டு வந்திருந்து திருமணத்தைச் சீரும் சிறப்புமாக நடத்தித் தந்தமைக்கு மிக மிக நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கற்றவர் அனைவரும் உங்கள் உரையைப் போற்றினர். எங்கள் இல்லத் திருமணம் தமிழ் மணம் கமழ வேண்டும் எனும் எம் வேட்கையை நிறைவேற்றித் தந்தமைக்குப் பெருமை கொள்கின்றேன். —உங்கள் உடல் நலனை நன்கு பேணிக் கொள்ள கேட்டுக் கொள்கிறேன். இன்னணம், உங்கள் அன்பு மறவர்

—மு. தமிழ்நெஞ்சன், துறையூர்.

ஓ: 1464: பெருமதிப்பிற்குரிய பாவலரேறு அவர்களுக்கு, வணக்கம். நாற்பது ஆண்டுகளாக நம் தமிழினத்தைத் தாங்கள் தட்டி எழுப்ப எத்தனை எத்தனைப் பாடல்கள்! ஊட்டக் கருத்துகளை எடுத்துரைக்கும் உரை வளம்; கருத்தாழமிக்க கனிவான சொற்பொழிவுகள்; எழுதியும் பேசியும் மானமுள்ள தமிழர்கள் வீறு கொண்டு எழுந்தாரல்லர். பதவிக்குப் பல்லிளித்துக் காலில் விழ்ந்தாலும் சாகும் வரை அமைச்சர் பதவியில் உலா வர வேண்டுமென்று, தன்மானம் இழந்த சொரணையற்ற தமிழர்கள் வாழும் தமிழ் நாட்டில், தாங்கள் ஆற்றும் பணி இன்று கடுகளவாக இருக்கலாம். ஒரு நாள் உண்மைத் தமிழர்கள் உணரும் போது ஒப்பரிய தங்களின் பெரும்பணி உலகத்தின் உச்சியில் நிற்கும். சுவடி 26;ஓலை 1-இல் தாங்கள் எழுதிய அட்டைப் பாடல்கள் என்ன வளம், என்ன கருத்து; அறுசீர் நிலைமண்டிலத்தில் பாவேந்தரையும் மிஞ்சி விட்டீர்கள்! தேர்தல் முடிந்து ஓய்ந்து போய் இருக்கும் சூழலில் தங்கள் பாடல்களும் ஆசிரிய உரையும் நாடி நரம்புகளை முறுக்கேற்றி விட்டன.

தி.மு.க ஆட்சியிலிருந்தபோது ஈழ விடுதலைப் புலிகளுக்குப் பெரிதும் உதவி செய்துவிடவில்லை. அதை விட முந்தைய ஆட்சியினர் ஈழ விடுதலைப் புலிகளுக்கு அடைக்கலம் தந்து ஆதரவு நல்கினர். இதை யான் தவறென்று கூறவில்லை. நடுவணரசு, துமுக்கிப் பயன்பாடு பரவிவிட்டதென்று போலித் தலைமையமைச்சர் எடுப்பாரின் கைப்பிள்ளையாகி ஆட்சியைக் கலைத்தனர். அதன் பிறகு தமிழகத்தில் விரும்பத்தகாத சூழல் நடந்ததாகப் பரப்பல் செய்து தி.மு.கவின் தோல்விக்குக் களம் அமைத்தனர். இனி, தி.மு.க தலையெடுக்க முடியாது என்று அவாள் இதழ்களும், அக்ரகாரமும் கொட்டமடிக்கின்றன; சில தறுதலைத் தமிழர்கள் தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கின்றனர். விரைவில் அவர்கள் ஏமாறிப் போவார்கள். பாவேந்தன் நூற்றாண்டு விழாவில் தங்களுக்குத் தி.மு.க அரசு உரிய மதிப்புத் தராது போனாலும், புதிய ஆட்சியின் புரட்சித் தலைவியைப் புகழ்பாடச் சொல்லி உள்ளார், மதுரை அகமுடை நம்பி. உண்மையிலேயே அவர் அக முடையார்தான்!

பாவலர் அய்யா! உங்களுக்கொரு வேண்டுகோள். தப்பித் தவறிக் கூட அரசவைப் பாவலர் பதவி உங்களுக்கு வேண்டாம்.

# சில பயனுள்ள மருத்துவக் குறிப்புகள்!

- இடுப்புப் பிடிப்புள்ளவர்கள், முருங்கைக் கீரையோடு சிறிது உப்பு சேர்த்து இடித்துப் பிழிந்து, அச்சாற்றை இடுப்புப் பிடிப்பு, கைக்கால் பிடிப்பு உள்ள இடத்தில் தடவித் தேய்த்து விடவும். இவ்வாறு இரண்டு, மூன்று தடவைகள் செய்தால், பிடிப்பு முழுவதும் நீங்கி விடும்.
- புளி வாயில் உமிழ் நீரைச் சுரக்கச் செய்யவும், மலத்தை இளக்கவுமே உணவில் பயன் படுத்தப் படுகிறது. ஆனால், புளியை இரவு உணவில் சேர்க்கக் கூடாது. எலுமிச்சையையும் இரவு உணவில் சேர்க்கக் கூடாது. அவை ஆண்களின் ஒளி நீரை விரைவில் வெளியேறும் படி செய்து விடும்.
- மிளகாயில் தாமிரச்சாரம் உள்ளது. இது உடலை வலுப்படுத்த உணவில் பயன் படுத்தப் படுகிறது. நிறைய மிளகாய் வற்றலைப் பயன் படுத்துபவர்கள் உடல் வன்மையாக இருக்கும்.
- அதிகாலை வேளையில் சிலர் வரட்டு இருமலால் தொல்லைப் படுவர். கடுகை அம்மியில் வைத்துப் பட்டுப் போல் அரைத்துக் குன்றிமணியளவில் தேனில் குழைத்து 2, 3 வேளைகள் சாப்பிட வரட்டு இருமல் நிற்கும்.
- வயிற்றுளைச்சல், அடிக்கடி சிறு அளவு மலம் போகும் வயிற்றுக் கடுப்பு—இவற்றுக்கு, ½ தேக்கரண்டி வெந்தயத்தை வாயிலிட்டு, மோர் சாப்பிடவும். இரண்டு ஒரு வேளையில் குணமாகும். உடல் வெப்பமும் குறையும்.
- வயிற்றுப் பொருமலுக்கு, ½ விரற்கடை நீளமுள்ள சுக்கை, மேல் தோலைச் சீவி விட்டுத் தட்டிக் கொஞ்சம் பனை வெல்ல-

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

வீபீடண அரசினர் உங்களுக்குத் தரவும் மாட்டார்கள். எப்பொழுதும் போல் நடுநிலையோடு தமிழர்களுக்குத் தகவுரை எழுதுங்கள். நடைபெறும் ஆட்சி தமிழர்களுக்குப் பகையான ஆட்சி என்பதை முடிவெடுப்புகள் காட்டிக் கொண்டிருக்கின்றன, அன்றொரு நாள் கலைஞருக்கு அழைப்பு விடுத்தீர்கள். ஆனால் தாங்கள் அழைப்பைக் கலைஞர் செவி மடுத்ததாக இல்லை. பதவியைத் தக்கவைத்துக் கொள்ள எவ்வளவோ முயன்றார். எட்டப்பன் இருக்கும் தமிழகத்தில் எப்படி முடியும்? இன்றும் கூறுகிறேன். தங்களையும் தங்களைப் போன்று தமிழ் இன மறுமலர்ச்சிக்குப் பாடுபடும் தக்கவர்களையும் கலைஞர் பாதை தெரிந்து, பயணத்தில் ஒன்று சேர்ந்தால், தமிழகம் ஒளிமயமாகும். ஈழத்தில் குரல் கொடுக்கும் விடுதலை வேங்கை போல் தமிழகத்தில் யாருளர்? காலம் தான் கூற வேண்டும்!

அன்புள்ள, —ப. ச. தமிழ்நம்பி, செயலாளர்,
தமிழர் வாழ்வியல் இயக்கம், திருவாரூர்.

Scanned with CamScanner

மும் ஓர் ஏலக்காயையும் நசுக்கித் தண்ணீர் விட்டுக் காய்ச்சி ஒரு குவளைத் தண்ணீரைக் குடிக்கவும். வயிற்றுப் பொருமலும் நீங்கும். உடல் புத்துணர்வும் பெறும்.

- உடலுள்ள திசுக்கள் வளர்ச்சியடையவும், உடல் இயங்கவும், பொதுவான மாந்தன் ஒருவனுக்கு நாள் ஒன்றுக்கு 2400 'கலோரி' வெப்பம் தேவை.
- நல்ல பசி உண்டாக, சீரகம் கொஞ்சம் எடுத்துப் பொன் வறுவலாய் வறுத்தெடுத்துப் பொடி செய்து பனை வெல்லம் சேர்த்து உருண்டைகளாகச் செய்து தேவையான பொழுது உண்டுவர நன்றாகப் பசி எடுக்கும்.
- செம்பட்டைத் தலை முடி இருப்பவர்கள் போதிய அளவு சீரகத்தைப் பொன் வறுவலாய் வறுத்துப் பட்டுப் போல் தூள் செய்து, காய்ச்சிய ஆவின் பாலில் கலந்து தலையில் தேய்த்துக் ஊற விட்டு அரை மணி நேரம் கழித்துக் குளித்து வர, தலை முடி கரு கரு வென்று மாறும்; வளர்ச்சியும் பெறும்.
- சர்க்கரை நோயுள்ளவர்கள் புரதச் சாரத்திற்காக உண்ண வேண்டிய பொருள்கள்: கொண்டைக் கடலை, பாசிப்பயிறு, உளுந்து, கொழுமொச்சை (சோயா பீன்சு).
- மலச்சிக்கல் உள்ளவர்கள் தூய்மையான வெந்தயத்தை இரவு படுக்குமுன் ஒரு தேக்கரண்டி அளவு வாயில் போட்டு மென்று தின்று, அல்லது அரைத்து விழுங்கித் தண்ணீர் பருகவும். காலையில் தொல்லையின்றி மலம் கழியும்.
- நீரிழிவு உள்ளவர்கள், நாளும் காலையில் ஒரு தேக்கரண்டி அளவுள்ள வெந்தயத்தை அதிகாலையில் வெறும் வயிற்றில் வாயில் போட்டு அப்படியே விழுங்கி ஒரு குவளைத் தண்ணீர் குடிக்கவும். இவ்வாறு 21 நாள்கள் தொடர்ந்து செய்து வர சர்க்கரையின் அளவு மிகவும் குறைந்து விடும். தொடர்ந்து சில மாதங்கள் சாப்பிட்டு வந்தால் நீரிழிவு நோய் அறவே நீங்கி விடும்.
- கோவை இலை மஞ்சள் காமாலை நோயைக் கீழாநெல்லியை விட மிக விரைவில் குணப்படுத்துகிறது. ஒரு கைப்பிடி கோவை இலையை அரைத்து நெல்லிக்காயளவு உருட்டி இரண்டு உருண்டைகளை, அதிகாலை வெறும் வயிற்றில் வாயில் போட்டு விழுங்கி, மோரோ சோற்று நீரோ குடிக்க வேண்டும். இவ்வாறு மூன்று நாள்கள் சாப்பிட்டு வர மஞ்சள் காமாலை நோய் அறவே நீங்கி விடும்.

---

## அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். — அமைச்சர்

Scanned with CamScanner

# செய்திகள்

(இதழில் போதிய இடமின்மையாலும், இதழ்கள் காலந் தாழ்ந்தே வெளிவந்து கொண்டிருப்பதாலும், நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகளையும் காலந் தாழ்ந்தே வெளியிட வேண்டியிருக்கிறது. எவ்வாறேனும் நிகழ்ச்சிகள் பற்றி அன்பர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்னும் நோக்கில் இவை வெளியிடப் பெறுவதால், செய்திகள் காலந் தாழ்ந்து வெளிவருவது பற்றிக் கவலைப் பட வேண்டா என்று கேட்டுக் கொள்கிறோம்.)

## 1. தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு-பொதுக் கூட்டம்!

கடந்த 7-1-91-ஆம் நாள், சென்னை, தேவநேயப்பாவாணர் நடுவண் நூலக அரங்கில், மாலை 4மணி அளவில், தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு நடத்திய பொதுக் கூட்டம் ஒன்று முனைவர் சாலை இளந்திரையன் (அறிவியக்கப் பேரவை) அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு, திருவாளர்கள் பழ. நெடுமாறன் (தமிழர் தேசிய இயக்கம்), பாவலரேறு பெருஞ்சித்திரனார் (உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்), வழக்கறிஞர் இராமதாசு (தமிழின விடுதலைக் கழகம்), பேரா. சுப. வீரபாண்டியன் (விடுதலைக் குயில்கள்), கு. இராமகிருட்டிணன் (திராவிடர் கழகம்—இரா), கி. வெங்கட்ராமன் (தமிழ்நாடு மார்க்சியப் பொதுவுடைமைக் கட்சி), தியாகு (திலீபன் மன்றம்), பொழிலன் (தமிழ்நாடு இளைஞர் பேரவை), பேரா. சரசுவதி (தமிழ்நாடு அன்னையர் முன்னணி), சுந்தரம் (விடுதலைப் புலிகள் தோழமைக் கழகம்), ஞானம் (மக்கள் சனநாயக இளைஞர் கழகம்), புலவர் இளமாறன் (பிரபாகரன் பாசறை) ஆகியோர் கலந்து கொண்டு கருத்தறிவித்தனர்; விடுதலைப் புலிகளின் தமிழீழப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றினர்.

## 2. மு.அமுதன்-கோ.மஞ்சுளா வாழ்க!

சென்ற 18-1-91 வெள்ளிக் கிழமை மாலை 5 மணி அளவில், வெங்காளூர் (பெங்களூர்), முனுசாமி—அன்னம்மாள் அவர்களின் மகன் செல்வன், மு.அமுதன் அவர்களுக்கும், கோவிந்தசாமி—தனபாக்கியம் இணையரின் மகள், செல்வி. கோ. மஞ்சுளாவுக்கும், ஐ.சுந்தர் அவர்கள் தலைமையிலும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் முன்னிலையிலும், மங்கல மணவிழா இனிதே நடைபெற்றது.

மணமக்களை வாழ்த்தி, திருவாளர்கள் முருகேசன், எம். பெரியப்பா, டி. திராவிடமணி, பி. எம். வெங்கடேசு, டி. தாமோதரன், ஆகியோர் நல்லுரை வழங்கினர். இறுதியில்

Scanned with CamScanner

பாவலரேறு பெருஞ்சித்திரனார் மணமக்களை வாழ்த்திச் சிறப்புரையாற்றினார். திருமண நிகழ்ச்சியை வெங்காலூர், பெரியார் நகர் ஐம்பேராய உறுப்பினர்கள் நடத்திவைத்தனர். தொடக்கத்தில் இளங்கோவன் வரவேற்புரையாற்றினார். இனிய விருந்துடன் நிகழ்ச்சிகள் நன்கு நிறைவுற்றன.

**3. பாவேந்தர் நூற்றாண்டு விழா, பொங்கல் விழா-**
**திருச்சி, ஊரகம் (B.H.E.L.) முத்தமிழ் மன்றம்:**

(இதன் விரிவான செய்திகள் சுவடி 25; ஓலை 12-இல் வெளியிடப் பெற்றுள்ளன.)

**4. தமிழ்ச்செல்வம்-கலைவாணி வாழ்க!**

சென்ற சுறவ (தை)த் திங்கள் 12 (25-1-91) அன்று வெள்ளிக் கிழமை, காலை 8 மணியளவில், சென்னை, புதுவண்ணை, துறைமுகக் குடியிருப்பில் உள்ள (M.P.T.) குமுகாயக் கூடத்தில் (Community Hall) திருவாளர்கள் அ. இராமகிருட்டிணன் — பாளையம்மாள் இணையரின், இரண்டாவது மகனும், காலஞ்சென்ற தமிழக விடுதலை மறவன் தமிழரசனின் இளவலும் ஆகிய செல்வன் தமிழ்ச் செல்வத்திற்கும், திருவாளர்கள் பச்சையப்பன் — செயலக்குமி இணையரின் இரண்டாவது மகள் செல்வி கலைவாணிக்கும், மறைந்த தமிழரசன் அவர்களின் விருப்பத்திற்கிணங்க, உ.த.மு.க முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் தலைமையில், தமிழ்த் திருமணம் நடைபெற்றது.

மணமக்களை வாழ்த்தி, தமிழின விடுதலைக் கழகத் தலைவர் வழக்கறிஞர் தி.இராமதாசு, இறை, பொற்கொடி, மா.பொழிலன், அ.ச.மூர்த்தி, அ.மு. நிசாமுதீன், கி. குணத்தொகையன் ஆகியோர் நல்லுரை வழங்கினர். தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று திரு. சிவபெருமான் பேசினார். இறுதியில் நன்னலக்குழு, பாதுகாப்புக் குழு நன்றியுரை கூறின.

**5. எல்.ஆர்.சி.அரசினர் மகளிர் கலைக் கல்லூரி-திருப்பூர்.**
**கல்லூரி முத்தமிழ் விழா:**

கடந்த 16-2-91 அன்று காலை 10.45 மணியளவில், திருப்பூர், எல்.ஆர்.சி.அரசினர் மகளிர் கலைக் கல்லூரியின், முத்தமிழ் விழாவின் காலை நிகழ்ச்சி நடைபெற்றது. பேரா. திருவாட்டி ச. மனோன்மணி வரவேற்பு நிகழ்த்தினார். முதல்வர் திருவாட்டி கி. அனந்தலட்சுமி அவர்கள் தலைமை யேற்றார். பேரா. திரு. சாலமன் பாப்பையா அவர்கள் சிறப்புப் பேருரை நிகழ்த்தினார். இறுதியில் செல்வி. பி.சுமதியின் நன்றியுரைக்குப் பின் காலை நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

மாலை 3 மணியளவில், இறை வணக்கத்திற்குப் பின் பேரா. தி. அன்னக்குரல் (அம்சத்வனி) அவர்கள் (தமிழ்த் துறைத் தலைவர்) வரவேற்புரை நிகழ்த்தினார். அதன் பின் பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் சிறப்புப் பேருரை நிகழ்ந்தது. அதற்குப் பின்

Scanned with CamScanner

முதல்வர் திருவாட்டி கி. அனந்தலட்சுமி வாழ்த்துரை நல்கினார்; இறுதியில் பேரா. வி.சாந்தாபணி அம்மையார் நன்றி நவின்றார்.

பேரா. திருவாட்டி தி. அன்னக்குரல் அவர்கள் தம் வரவேற்புரையில், பாவலரேறு அவர்களை உணர்ச்சி பொங்க வரவேற்றுக் கூறிய கருத்துரைகள் குறிப்பிடத் தக்கனவ; அவை கீழ்வருமாறு:

"இன்று முத்தமிழ் விழா முழுக்க முழுக்க மணக்கிறது; இதோ, நம் முன்னிலையில் தமிழ்க் கொடி பறந்த இமயமே பெருமித வீறுடன் (கம்பீரமாகக்) காட்சியளிக்கிறது. இமயத்தை (பாவலரேறு அவர்களை) எப்படி எளிதாகக் கொண்டு வந்து விட்டோம் என்று வியப்படையாதீர்கள். நம் நல்ல உள்ளத்திற்கு இறைவன் எல்லாம் தருவார். ஆம்! நம்மிடையே வீற்றிருக்கும் திரு. துரையரசன் அவர்கள் நம் மாணவி ஒருவரின் தந்தை! தமிழ்ப்பற்று ஊற்றெடுத்து வழியும் நெஞ்சம்! அவர்தாம் ஐயா அவர்களை இங்கு எழுந்தருளச் செய்தவர். அன்னாரையும் நம் அழைப்பை ஏற்று வந்திருக்கும் விருந்தினர் பிறரையும் வருக வருக என வரவேற்கிறேன்.

அடுத்தபடி, இன்று முத்தமிழையும் உண்டும், கண்டும், கேட்கும் மகிழும் எங்கள் ஆசிரியப் பெருமக்களையும், மாணவச் செல்வங்களையும், அலுவலகத்தாரையும் வருக வருக என வரவேற்கிறேன். அடுத்து, நெற்றியிலே 'திலக' மிட்டாற் போல, இங்கு மேடையிலே திகழும் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களை முதற்கண் உங்களுக்கு அறிமுகப் படுத்துவது என் கடமை."

"ஏறத்தாழ, ஈராயிரம் ஆண்டுகளாகத் தன் உணர்வையே இழந்து விட்ட தமிழ் இனத்தின் வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்தும் பணியில் வள்ளலார், பெரியார், மறைமலையடிகளார், பாவேந்தர், அண்ணா, பாவாணர் வரிசையில், சென்ற 30 ஆண்டுகளாகத் தம் குடும்ப நலம் கருதாது; முன் புதையுண்ட முத்தமிழ்ச் சிறப்பினை, மன்பதைக்கு உணர்த்தும் பாவலரேறு பெருஞ்சித்திரனார் தம் ஓவா முயற்சியின் அறிவு விளைச்சல்கள் மக்களைச் சென்று அடைந்திருப்பின், நாம் இன்று, இவரை யார் என்று கேட்டிருக்க மாட்டோம். சங்கம் தொட்டு வரும் காழ்ப் புணர்வுக்கு இவர் மட்டும் நெறி (விதி) விலக்கா?

ஐயா அவர்களின் சொந்த ஊர் சேலம். அங்கேயே கல்லூரியில் பயின்றவர். புதுவையில் அஞ்சல் துறையில் பணியாற்றியவர்; பாவேந்தர் பாரதிதாசனாருடன் நெருங்கிய தொடர்புடையவர்; பதினான்கு அகவையிலேயே 'கொய்யாக்கனி' என்ற பாவியம் எழுதியவர். இந்நூலுக்குப் பாரதிதாசனார் அறிமுகப் பாடல் தந்துள்ளார். மூதறிஞர் தேவநேயப் பாவாணருடன் தொடர்புடையவர்; (அவர் மாணவர்). தமிழ்ப் பணிக்குத் தம்மையே ஒப்படைத்து (அர்ப்பணித்து)க் கொண்டவர். தூய தமிழில் இதழ் நடத்த முடியும் என்பதை மெய்ப்பித்துத் 'தென்மொழி' 'தமிழ்ச்சிட்டு' 'தமிழ்நிலம்' போன்ற இலக்கிய, கலை, குமுகாய

இதழ்களை நடத்தி வருபவர். எவரிடமும் எதையும் உதவி என வேண்டாதவர். நடுநிலை தவறாத ஒரு கொள்கைச் சான்றோர். இங்கிலாந்து, பிரான்சு, செருமனி, சுவிட்சர்லாந்து, மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, முதலிய நாடுகளுக்குச் சென்று உலகம் முழுவதும் அன்பர்களைக் கொண்டவர். பல நூல்களைப் படைத்துள்ளார். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம். குழந்தையைப் பார்த்து அவர் பாடும் பாட்டு இது;

ஆடு ஊஞ்சல் ஆடு!
அன்னைத் தமிழ் பாடு!
பாடுபவள் காதிரண்டில்
பச்சை மணித் தோடு!

காற்றில் முடி ஆட
கைவளைகள் பாட
ஆற்றில் அலை பாய்வது போல்
அங்கும் இங்கும் ஓட
ஆடு ஊஞ்சல் ஆடு!

ஐயா, எங்கள் குழந்தைகளே ஊஞ்சல் ஆடி விட்டார்கள்;

அகத் துறையும் புறத் துறையும் அமைந்த நூறாசிரியம் என்ற நூல் இவரின் மணி மகுடம். கழக இலக்கியமே நம் கண் முன் வருகிறது பாருங்கள்.

அன்பெனப் புகழ்கோ அருள் என மகிழ்கோ
என் கொல் பாகர்க்கு இடுகறி என்று
அறிந்திசின் போதந்த ஏவலர்க்கு எம்மனைப்
பாகற் பசுங்காய் புளிக்குழை அட்டுத்
தாய்தர மிசைந்த தகவுரைத்து எங்கோ
அது நயந்து அருந்தார் ஆகலின் அதுமற்றுப்
பிறகொளக் கூறுகோ என்றலும் அவன் மீண்டுப்
பெய்துகத் தந்தது இவக்காண் முழுத்தும்
பைம்பருக் கொழும்புடைப் பாகல்
ஐதகைக்கு என்யான் நோற்ற வாறே!

—என்ற ஐயாவின் பாடலை மட்டும் கூறி, அதனை அவர்களே நுகரந்து கூறக் கேட்க ஆசை என்று வேண்டி, உங்கள் தமிழ்க் கடலுள் மூழ்கத் தெரியாவிடினும், அருந்தக் காத்திருக்கிறோம் என்றும் கூறி, எங்கள் எல்லோர் சார்பிலும் உங்களை வருக வருக வருக என வரவேற்கிறேன்; வணக்கம்.

இனி, விழா இறுதியில் நன்றி நவின்ற பேராசிரியை திருவாட்டி வி. சாந்தா மணி அம்மையார் அவர்களும் தம் நன்றியுரையைத் தமிழினிமையுடன் வீறு பெற முழக்கினார்கள். அவ்வுரையும் குறிப்பிடக் கூடியதொன்றாகலின் அதனையும் இங்குத் தருகிறோம்:

“என்றும் போன்று, இன்றும் வந்து நின்றது குறித்து நடுக்கம்

Scanned with CamScanner

கொள்ளற்க! 'நன்றி' எனுமொரு மூவெழுத்துச் சொல், முத்தமிழ் விழாவில் கூறியவுடன் விரைந்து சென்றிடுவன், யான்!

இப் பொன்னந்தி மாலைப் பொழுதில், கல்வியிலும் கலைகளிலும் எதிலும் எங்கும் சிறப்புற உதவிய கல்லூரி அமைப்பினர் தமக்கும் அரசினர்க்கும் முதற்கண் எல்லையில்லாத நன்றி.

உருவும் திருவும் உயர்ந்தவை அனைத்தும் உடைய
பருவ மங்கையாய்ச் சுழலும் முதல்வர் தலைவரின்
(என்றும் இளமையாய் இருக்க விரும்பும்)
பெருமை மிக்கதோர் தலைமை உரைதனில்
(தமிழ்தானே என்றிருப்பதன்றித்
தமிழ் தேனே என்றிருக்க வேண்டும் என்ற)
அருமை யுடையதோர் வாழ்த்துரைக்கும்
ஆயிரம் நன்றி!

நற்காலைப் பொழுதினிலே, நகைச் சுவைக் கடலோ என நற்சுவை பயந்த கன்னங்கரேல் எனும் தன்தோற் புளியைக் கரைத்துக் கரைத்துச் சாற்றைச் சுவைத்துச் சுவைத்துக் கற்கண்டாய் இனிக்க இனிக்க நல்லுரை யாற்றிய, சொற்போர்ப் புலவர் சாலமன் பாப்பையா அவர்கட்கு(இவண் இல்லெனினும்), பற் பல நன்றிகள் பாங்காய்ச் செப்புவன் யானும்.

இன்னிசை தன்னுடன் இறை வணக்கம் இசைத்த
என்னரும் மாணவச் செல்வங் கட்கு இசைப்பன் நன்றி!
திறமேற் கொண்டு போற்றுதற் குரிய நகைச்சுவையுடன்
வரவேற்பினை வழங்கிய பேராசிரியர் மனோன்மணிக்கும்
இன்னிசைக் குயிலோ அழகிய மயிலோ அன்னமோ
சின்னதொரு பிடியோ என அனைவரும் தெளிவதன் முன்னர்
மின்னலெனச் சொன்னல மதனொடு கனிவொடு பணிவுடன்
கன்னலென வரவேற்புரை வழங்கிய அம்சத்வனிக்குச்
சொன்னேன் பலநூறு நன்றி பாங்குடனே இங்கே!

நித்திய தரித்திரராய் உழைத்துழைத்துத்
தினைத்துணையும் பயனின்றிப் பசித்த மக்கள்
சிறிதுகூழ் தேடுங்கால் பானையாரக்
கனத்திருந்த வெண்சோறு காணும் இன்பம்
கவின் நிலவே உனைக் காணும் இன்பந் தானோ!

—தமிழுணர்வுடைய கவின் நிலவே! இசை நிலவே!
நாங்கள் உமைக் காணும் இன்பந்தானு?

பாவலரேறு பெருஞ்சித்திரனர் மரத்திற்கும் உணர்வூட்டும்
நாவலரேறு! நற்கனிச்சாறு! பசிக்கு நற் சோறு!

அயர்வினை நீக்கித் துயர்களைப் போக்கித் துணிவுடன்
உயர்ந்தவர்! பொதுமை உணர்வொடு சிறந்தவர்!

சேலம் தந்த செம்மல்! பாவாணர் தம் மாணவர்! இன்று
ஞாலம் போற்றிட, தமிழே உயிரென வாழ்வது புரியும்!

Scanned with CamScanner

பாவேந்தர் நண்பரே! தமிழ்தனக் காகச் சிறையும் சென்ற
மாவேந்தரே! நீர் இயற்றிய எண்சுவை எண்பதும்,
கொய்யாக்கனியும்
பாவியக் கொத்து, பள்ளிப் பறவைகள் எனும் நூற்கள்
எண்ணில எழுதி எழுதி உலகும் இத்தமிழ்
மண்ணும் வளம் பெற வாழும் பாவல!

அன்று, பெருமிதமே உருவான பெருஞ்சித்திரனாரைச்
சங்கம் தந்தது!
பெருமைக்கும் கொள்கலனாய்—இன்று உம்மைத் தந்தது!
குழுகாய நலன் கருதி ஈகச் செம்மலானீர்!

பாடிப் பாடி புரவலரை நாடி நாடி,
உற்றாரைத் தேடித் தேடி,
வாடியவரை யெல்லாம் வாழவைத்தார் சங்கத்தார்!
இச் சிங்கத் தமிழரோ,
உடல், பொருள், ஆவி அனைத்தும்
இச் சங்கத் தமிழுக்கே ஈந்தார் என்றால்,
இத் தங்கத் தமிழ் மாமணியை என்னெனப் புகழ்வது?

பொங்கும் புகழுடன்
என்றும் வாழ்க!—என்றே போற்றுதும்!
யாம் வாழும் நாளும்,
வானகமும் வையகமும் தண்மதியும்
தாம் வாழும் நாளும்;
வாழிய வாழிய என்றே கூறி,
நன்றே உரைதனை ஆற்றி,
அனைவர் உள்ளத்தையும்,
வென்றே நிற்கும்
தமிழ்த் தாயின் தலைமகன்
நன்றே வாழ்க என்றே வாழ்த்திப்
பற் பல கோடி நன்றிகள் கூறி
எனையும் வாழ்த்தி—வருகிறேன்—வணக்கம்:

---


பாவலரேறு பெருஞ்சித்திரனாரின்

## ஓ! ஓ! தமிழர்களே!

கடந்த 17-2-91-இல் ஈரோட்டில் நடந்த உ:த:மு:க: இரண்டாவது மாநாட்டில் ஆசிரியர் செய்த அரிய சிறப்புச் சொற்பொழிவு நூல்!

வெள்ளைத் தாள் பதிப்பு : 9-00

செய்தியச்சுத் தாள் பதிப்பு: 6-50

இஃது ஒரு புதிய வெளியீடு: பதிவுக்கொடுப்பு அஞ்சல்செலவு:3-00

தென்மொழி, சென்னை-5.

ஒண்சுடரே! மண்ணுள்ளவரை—மண்ணில் மாந்தன் உயிர் உள்ளவரை—மறக்க முடியாத—மறைக்க முடியாத—மாற்ற முடியாத மறத்தமிழனின்—மானத்தமிழனின்—மாணிக்கவுரை அது! வீரம் கொப்புளிக்கும்—கொதிக்கும் ஒரு நல்ல—மாந்தத் தமிழனை ஈன்ற அப்பொன்னினும் மேலான—பெற்றோர்களின் உருவத்தின் முன் தலைதாழ்ந்த என் வணக்கத்தை உரித்தாக்குகிறேன். மீண்டும் தங்களின் நெஞ்சுரத்தைப் பாராட்டுகிறேன்!

நன்றி, அன்புள்ள

—அருள்மணி, வெங்காலூர்-51,

ஐ: 1457: அன்புள்ள ஐயாவுக்கு, என் தமிழ் வணக்கம்; அருந்தமிழ்த் தொண்டன் எழுதும் அன்புச் செய்தி மடல். இங்கு நானும் தோழர்களும் நலம்; அவ்வண்ணமே அங்கு அனைவரின் நலமறிய ஆவல்;

அருந்தமிழைத் பம்பாயில் உள்ள "தென் இந்திய நலக்கழக பள்ளி" மற்றும் கல்லூரியிலிருந்து நீக்குவதாக மேலாளுமை எடுத்த முடிவை எதிர்த்துக் கடுமையாகப் போராடி, அதன் பயனாக அத்திட்டத்தைத் தோல்வியடையச் செய்து, தமிழ் நீடிப்பதை உறுதியாக்கியுள்ளோம். பம்பாயில் கல்வித் துறையில் ஏற்பட்ட தமிழ் மாணவர்களின் முதல் போராட்டம் இதுவேயாகும். நாங்கள் தொடர்ந்து பம்பாய்வாழ் தமிழ் மக்களுக்குத் தொண்டு செய்ய உள்ளோம்.

இரா. அன்பு அவர்கள் தங்களைத் சந்தித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். மேலும் அடுத்த மாதம் நமது தோழர் ஒருவர் தமிழகம் வரவிருக்கிறார்; தங்களைக் கண்டிப்பாகச் சந்திப்பார்; தங்களின் அருந்தமிழ் தொண்டர்கள் நாளுக்கு நாள் வளரட்டும்; தமிழ் இனம் பொற்காலத்தைக் காண யாவரும் செயல் படுவோம்; தென்மொழி, தமிழ் நிலம், தமிழ்ச் சிட்டு வளர்ச்சியடைய வாழ்த்துகள் பல கோடி. நன்றி, —ப. திருமலை,

தமிழர் நலக்கழகம், வேம்பாய்.

ஐ: 1458: பெருமதிப்பிற்குரிய அய்யா, வணக்கம். நாம் எழுதிய மடலுக்கு மேற்கு செர்மனியில் இருந்து பேராசிரியர் திரு. தாமோதரன் அவர்கள் மறுமடல் எழுதியுள்ளார்கள். தங்களைப் பெரிதும் உசாவித் தங்கட்கும் உரிய செய்தியைத் தெரிவிக்குமாறு மடலில் குறிப்பிட்டுள்ளார்கள். 07-06-91க்குள் முனைவர் பட்ட ஆய்வறிக்கையைப் பாரதிதாசன் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பி விடுவதாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

எப்படியும் சூன் இறுதிக்குள் அங்கிருந்து அறிக்கை வந்துவிடும் என்று நம்புகிறேன். சூலையில்தான் அவர் அறிக்கை அனுப்புவதாக இருந்தாராம். நம் மடல் கண்டபிறகு, தம் முடிவை மாற்றிக் கொண்டு ஒரு திங்கள் முன்பாகவே அனுப்பி வைப்பதாகக் குறிப்பிட்டு மிகவும் அன்பு பாராட்டி எழுதியுள்ளார்கள். தங்கள் பால் பேரன்பு கொண்டுள்ள உயர்ந்த நெஞ்சமுடையவராக அவர் விளங்குவதை மடலின்கண் உள்ள ஒவ்வொரு சொல்லும் உணர்த்துவதாய் உள்ளது. அவரிடம் இருந்து இத்தகு மடல் வர உறுதுணையாய் இருந்த தங்கட்கு என் நன்றியை உரித்தாக்கி மகிழ்கிறேன். தங்கள் அன்புள்ள,

—கடவூர். மணிமாறன், கிருட்டிணராயபுரம்.

ஐ: 1459: அன்புமிக்க அய்யா அவர்களுக்கு 'வணக்கம்! தாங்கள் என் மகள் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அருமையான கருத்துகளை எடுத்துச் சொல்லி அனைவரையும் சிந்திக்கச் செய்து விட்டீர்கள். குறிப்பாக, சேர சோழ பாண்டியர்கள், இராவணன், மாவலி போன்றவர்களையெல்லாம் விட பிரபாகரனே சிறந்த வீரன், யாருக்கும் அடிபணியாத மாவீரன்

என்று தாங்கள் குறிப்பிட்டது, அரங்கத்தில் உள்ள அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது. "வரலாற்றில் விடுதலை வீரன்தான் நிற்பான்." அகப்பட்ட வரையில் சுருட்டுகிற அரசியல் தாரர்கள் அடியோடு மறைந்து போவார்கள். எவ்வளவு காலத்திற்குத் தமிழ் இளைஞர்கள் கொடி தூக்கவும் கோல் நடவும் தோரணங் கட்டவும் விளம்பரத்தாள் ஒட்டவும் பயன்படுவார்கள்? இது போன்ற கொத்தடிமைத்தனத்திலிருந்து அவர்களை விடுபடச் செய்து, தமிழீழ விடுதலைக்கு ஆதரவாக மாற்றுவது நமது தலையாய கடமையாகும்!

சாதியின் பெயராலும், மதத்தின் பெயராலும், கொடியின் பெயராலும், தமிழன் பிரிந்து கிடக்கிறான். இதற்கு உரமிட்டு, நீர் ஊற்றி வளர்ப்பவர்கள், அரசியல்காரர்கள். இந் நிலை இப்படியே நீடித்தால் இன்னும் இரண்டாயிரம் ஆண்டுகள் ஆனாலும் வட நாட்டானுக்கு நமது இனம் அடிமைப் பட்டுக் கிடப்பதைத் தவிர வேறு வழியில்லை. ஆகவே தமிழீழ—விடுதலைப் போருக்கு, ஆதரவு திரட்ட நாடு முழுவதும்' திட்டமிட்டுக் கருத்துப் பரப்பலைத்துவங்க வேண்டும். ஒவ்வொரு நாளும், தமிழீழத்தில், தமிழன் தமிழச்சி பிணங்கள் விழுந்து கொண்டே இருக்கின்றன. அங்கு நம் இளைஞர்கள் அரத்தம் சிந்துகிறார்கள்; உயிரை விலையாகத் தந்து கொண்டு இருக்கிறார்கள். உணவு இல்லை; உயிர் காக்கும் மருந்து இல்லை; இன்னும் பிற இன்றியமையாத பொருள்கள் இல்லை. இனி, காலந்தாழ்த்தும் ஒவ்வொரு கணமும், மிகப் பெரிய கேடாக வந்து முடியலாம்.

அய்யா அவர்கள் என் குடும்ப விழாவில் கலந்து எனது தமிழினத் தொண்டுக்கு, ஏற்பிசைவு அளித்து விட்டார்கள். மிக்க மகிழ்ச்சி, இதை என் வாழ் நாளில் என்றும் மறக்க மாட்டேன்.

—தேனிசை செல்லப்பா, கோட்டூர்புரம்

O: 1460: அன்பார்ந்த ஐயா வணக்கம். தங்கள் புகழ் பரப்ப நடைபெறும் ஏற்பாடுகளை அறிந்து மிகவும் மகிழ்ந்தேன். தனித்தமிழ் இலக்கிய வரலாற்றில் தங்களை எவரும் தலைமை இடத்தில் வைப்பார்கள் என்பது தெளிவு. அது போல் தனித்தமிழ் இயக்க வரலாற்றிலும் தாங்கள் உயரிடம் பெற வேண்டும். அதற்கேற்பத் தங்களின் எதிர் காலப் பணிகள் அமைந்திட வேண்டும். தமிழகம் முழுவதற்குமான ஒரு தனித்தமிழியக்கத்தை முறையானதாகவும் முனைப்பானதாகவும் இயங்கும் இலக்கிய இயக்கமாக உருவாக்கும் பணியில் தாங்கள் ஈடுபட வேண்டும். மூன்றாவது அணியாக எதிர்காலத்திற்கு அது தேவை.

அன்பார்ந்த ஐயா, தாங்கள் கடந்த முறை என்னிடம் பேசும் போது வடசொல், தமிழ்ச் சொல் மாறுபாடு பற்றிக் குறிப்பிட்டீர்கள். தமிழ்ச்சொல் எது, வடசொல் எது எனக் கண்டறியத் தாங்கள் இது வரை எவ்வகை இலக்கணமும் உரைத்ததாகத் தெரியவில்லை. பாவாணர் 'முகமை' என்பதே தமிழ் என்று சொல்கிறார். தாங்களோ 'முகாமை' என்றே பல இடங்களிலும் எழுதி வருகிறீர்கள்! 'ஆதி' என்பது வடசொல் என்று பாவாணர் சொன்னார். தென்மொழியிலேயே அதற்கு மாறான கருத்து எழுதப் பட்டது. தெளிவான நெறிமுறை எதையும் வகுக்காமல் எங்ஙனம் உறுதியாகச் சொற்களை வகைப்படுத்த வியலும் என்பதைத் தெளிவுப் படுத்தினால் நன்று. அன்புடன்,

—க. தமிழமல்லன், புதுச்சேரி-9

(தொடர்ச்சி உள்ளே 23-ஆம் பக்கம்)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005. (தமிழகம்)